ஸ்ரீ ராம் ஜெய் ராம் ஜெய் ஜெய் ராம் ஓம்

# பப்பாவைத் தேடி

(ஓர் உள்ளார்ந்த தேடல்)

## அறிமுகம்

இந்த உலகத்தில் நாம் பிறந்த நாளிலிருந்து, நாம் நமது தேடலை ஆரம்பிக்கிறோம், உண்மையில், நாம் யார் என்பதை வரையறுக்கும் ஒரு தொடர்ச்சியான தேடல்கள் - தாயின் அன்பான தழுவல், அன்புக்குரியவர்களிடமிருந்து அன்பும் அக்கறையும், நம்மை இருட்டில் இருந்து ஒளிக்கு வழிகாட்டக் கூடிய நம் நலவிரும்பிகள், இள வயதில் இருந்து நம் மனத்தினைக் கடக்கும் எண்ணற்ற கேள்விகளுக்கான பதில்களுக்கு, நமது வாழ்நாள் பயணத்தில் ஒவ்வொரு திசையிலும், திருப்பத்திலும் நாம் சந்திக்கும் சிக்கல்களுக்கான தீர்வுகள், வாழ்க்கையின் உண்மையான அர்த்தத்திற்கும் நோக்கத்திற்கும், சமாதானத்திற்கும், நம் உள்ளத்தில் மகிழ்ச்சிக்கும் இணக்கத்திற்கும், நம்மை சுற்றிலும், எல்லா இடங்களிலும், - இவை அனைத்தும் மிக முக்கியமாக, தெய்வீகத்தோடு ஒரு தொடர்பு ஏற்படுத்தவே, அது மட்டுமே இந்த நிலையற்ற வாழ்க்கையில் நாம் எதைத் தேடுகிறோமோ அதைக் கண்டுபிடிக்க உதவும்.

'பப்பாவைத் தேடி'' என்பது ஆனந்தாஸ்ரமத்தை ஸ்தாபித்தஆசானும், தீவிர அருள் தாகத்துடன் இறை அருளை நாடி, முழுவதும் தன்னை அதற்கு அர்ப்பணித்து, அதன் விளைவாக, அவர் 'ராம்' என்று அன்புடன் அழைக்கும் உயர்ந்த இறை நிலையை அடைந்து, அந்த இறை உணர்விலேயே

எப்போதும் தோய்ந்து ஆனந்தமயமான வாழ்க்கை வாழ்ந்தவருமான பேரன்புக்குரிய பப்பா ராம்தாஸ் அவர்களுடைய அருள்பெற்ற வாழ்க்கையையும், அவரது உன்னத உபதேசங்களையும் ஆழமாக ஆராயும் ஓர் ஆர்வமிக்க முயற்சியே!

கடவுளைத் தேடி, பப்பா இவ்வுலக வாழ்க்கையின் சுகங்களையும், வசதிகளையும் துறந்து, தென்னாட்டு உள்பகுதிகளிலிருந்து தொலைதூர வட நாடு வரை எல்லா இடங்களிலும், அனைத்தும் அளிக்கும் இறைவனில் மட்டுமே நம்பிக்கை வைத்து அருள் நாடி யாத்திரை மேற்கொண்டார். பெரும்பாலும் வானமே அவரது கூரை; காட்டருவிகள் அவரது தாகத்தை தணித்தன; அறிமுகமில்லாத மக்கள் அவர் அறிந்திராத ஊர்களில் அவருக்கு உணவளித்தனர். ஆனால் உண்மையில் யாருமே அவருக்கு அந்நியர் இல்லை. ஒவ்வொருவரிடமும் அவர் ராமனையே கண்டார். அவர் இந்த மானிட வர்க்கம் முழுவதின் மேலும் தனது அளவிலா அன்பையும், கருணையையும் பகிர்ந்து கொண்டார்.. அவர், தான் கண்டறிந்த பரிபூரண நிலையை ஒவ்வொருவரும் அடைய வேண்டும் என விரும்பினார், அந்த பேரன்புக்குரிய 'ராமனுக்கு' நன்றி.

ஆன்மிக பாதையில் மிக அதி உன்னத நிலையை அடைய விரும்புவோருக்கு அவரது அருள்மொழிகள் என்றும் ஒளிரும் ஒரு துருவ நட்சத்திரமாக திகழ்கிறன. எனினும், பப்பாவின் உபதேசப்படி, இறை அனுபவத்தை பெற ஒவ்வொருவரும் அவர்களது சொந்த அனுபவத்தைக் கொண்டே ஆழ்ந்து செல்ல வேண்டும். அவர் கூறுகிறார்:

''ராமதாஸ் வார்த்தைகளை மேலோட்டமான சிந்தனைகளால் மட்டுமே புரிந்து கொள்ள முடியாது. தங்களது

சரியான அனுபவங்களைக் கொண்டுதான் அவற்றின் உள்ளார்ந்தக் கருத்துக்களை அறிய இயலும். இந்த அனுபவங்கள் உங்களது எண்ணங்களில் ஆழ்ந்து செல்வதால் மட்டுமே அடைய இயலும். உண்மையை சொல்லால் நியாயப் படுத்துவதால் மட்டுமே உணர இயலாது. நேரடி அனுபவத்தால் மட்டுமே அந்த உண்மை நிலையை உணர முடியும்.''

ஒவ்வொரு தேடலும், முடிவு எப்படி இருந்தாலும், கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு அனுபவமே. இது ஒரு கல்வி நோக்கில் அல்லது சாரமற்ற அறிவார்ந்த பயிற்சியாக இருக்காது; நாம் எடுத்துக் கொண்ட இந்த விஷயமும் அவ்வாறு தான். இது பப்பாவின் ஆர்வமிக்க அழைப்பிற்கான செவிமடுத்தலாகும். பப்பாவின் உணர்வுப் பூர்வமான அறைகூவல்:

**''கடவுளாக நீ இரு; மற்றவர்களையும் கடவுளிடம் அழைத்துச் செல்.''** இந்த தெய்வீக அழைப்பிற்கேற்ப நாம் எப்படி வாழ்வது என்பது நமக்கு முன் இருக்கும் புனிதமான பணியாகும். அதற்கு விடை தேடும் ஒரு சிறிய முயற்சியே இது!

இந்த கையேட்டில் ஐந்து பகுதிகள் உள்ளன:

1. வழிகாட்டி வரைபடம்,
2. ஆன்மிக பாதையின் வெளிப்பாடுகள்,
3. கற்றல்,
4. முடிவுரை மற்றும்
5. வாழ்க்கை சுருக்கம்.

1 **'வழிகாட்டி வரைபடம்'** விவரம் தேடலை விவரிக்கிறது. 'நமது ஆன்மிக முன்னேற்றத்தில் அது எந்த நோக்கத்திற்காக உதவுகிறது? எப்படி இந்த பயணம் நடத்தப்படுகிறது?' என்பவை விளக்கபடுகின்றன.

2. **'ஆன்மிக பாதையின் வெளிப்பாடுகள்'** என்பது தேடல் முடிவுகளே - பப்பாவின் வாழ்க்கை மற்றும் செய்திகளை நாம் ஆராயும்போது வெளிப்படுத்தப்படுகின்றனவை.

3. **'கற்றல்'** என்பது நமது அன்றாட வாழ்வில் மனதில் இருத்தி செயல் படுத்த வேண்டியவை.. நாம் 'ஆன்மிக பாதையின் வெளிப்பாடுகளை' ஆராயும்போது சேகரிப்போம்.

4. **'முடிவுரை'** என்பது முழுமையான பயணத்தின் சுருக்கத்தையும், மேலும் முன்னோக்கி செல்லும் பாதையையும் எடுத்துக் காட்டுகிறது. மற்றும்

5. **'வாழ்க்கை சுருக்கம்'** என்பது பப்பா சுவாமி ராம்தாஸின் சுருக்கமான வாழ்க்கை விவரங்களை வழங்குகிறது.

வழிகாட்டி வரைபடம்: பயணத்தின் நோக்கமும் வழிமுறையும்

## நாம் தேடுவது என்ன?

- *ஆனந்தாஸ்ரமம் என்றுச் செவிமடுக்கும் போதே நம் மனக்கண்முன் தோன்றுவது மனதைக் கவருவதும், உள்ளதைக் கொள்ளுவதும், ஆனந்த ஒளிக்கதிர்கள் வீசுவதுமான அதன் ஸ்தாபகர்; 'பப்பா' என்று வெகு அன்போடு எண்ணற்ற அவர்தம் பக்தர்களால் போற்றப்படும் பரமபூஜ்ய சுவாமி ராமதாஸ் அவர்களின் திருவுருவம்தான்!*
- இந்த ஆஸ்ரமத்துடன் சில காலம் தொடர்பு கொண்டு அதனால் பெரிய அளவுக்கு பயனடைந்தவர்கள் பப்பாவின் வாழ்வையும் வாக்கையும் பற்றி நன்கு அறிவார்கள்.
- ஆனால் ஆன்மிகத்தின் சிகரத்தை அடைய வேண்டும்

என்ற குறிக்கோள் உள்ளவர்களுக்கு பப்பாவின் அருள் மொழிகளின் உள்ளார்ந்த பொருளைத் தேடி அறிவது அவசியமாகின்றது. தேனீக்கள் பூக்களை நாடி சுற்றுவது

முதலில் அதன் அழகு, மற்றும் நறுமணத்திற்காகவே. ஆனால் அதிலுள்ள தேனை ருசிப்பதினால் மட்டுமே அவை திருப்தி அடையும். அதே போலவே பக்தர்களும் முதலில் பப்பாவின் ஆனந்த ஒளி வீசும் உருவத்தினாலே ஈர்க்கப்படுகிறார்கள். ஆனால் உண்மையான ஆனந்தத்தை அவரது உள்ளத்தில் உள்ஆழ்ந்த பொருளை அறிவதினால்தான் அடைய முடியும். அதற்கு அகமுகப்பட்டு உள்ளாழ்ந்துப் போகவேண்டியது அவசியமாகிறது.

## நாம் ஏன் தேடுகிறோம்?

- பப்பாவின் வாழ்க்கையிலும், உபதேசங்களிலும் இதுவரை நமக்குத் தெரியாத அல்லது சரிவர புரியாத பகுதிகளை அலசி ஆராயும் உத்தேசத்துடன் ஆழ்ந்து உள்ளே நோக்கி செல்லும் ஆன்மிகப் பயணமே இந்தத் தேடல் ஆகும்.

- இது பாலை சில செய்முறைகளுக்கு உட்படுத்தி அதனுள் உள்ளதை, அதாவது, நெய்யைப் பெறுவதைப் போன்றதேயாகும். பால் தயிராகிறது; அது கடையப்பட்டு வெண்ணை கிடைக்கிறது; பின் அது நெய்யாக மாற்றமடைகிறது. பால் விரைவாக கெட்டுவிடக் கூடியது; ஆனால் நெய் அதிக நாட்கள் கெடாதிருக்கும்; அதை எதில் சேர்த்தாலும் அதற்கு மணமும், சுவையும் கூடும். அது போல் ‘பப்பா’ அவர்களை ஒரு உடலோடு கூடியவராகப் பார்ப்பது ‘பால்’தனைப் பார்ப்பதே; ஆனால் அவரை நாம, ரூபங்களைக் கடந்த பரப்பிரம்ம

வஸ்துவாகப் பார்ப்பதே, என்றும் கெடாத நெய்யைப் பார்ப்பதாகும்.

- பப்பா இவ்வாறு அறிவுறுத்துகிறார்:
- **‘கடவுளை உன் உள்ளத்தில் பார்க்க வேண்டும், பின்னர் எல்லா இடங்களிலும் அவரைப் பார்க்க வேண்டும், வெளிப்படும் எல்லா உலகங்களாகவும் அவரே உள்ளார். கீழான நிலைகளை பின்பற்றி அங்கு மனநிறைவை தேடாதீர்கள்.‘.**
- நாம் எப்படி தேடுகிறோம்?
- பப்பாவின் தனித்துவம் வாய்ந்த வாழ்வில் இருந்து அடையாளம் கண்டு கொண்டால், அப்போது பப்பாவின் உள்ளத்தின் மையக் கருத்தை நோக்கிச் செல்லும் ஆன்மிக வாழ்விற்கானப் பயணம் தொடங்குகிறது. இங்கு ஒரு உதாரணத்தைப் பார்ப்போம்:
- சற்று ஆழ்ந்து நோக்கினால், ஆரம்பம் முதல், ஏற்கனவே இருக்கும் பாரம்பரிய வழிமுறைகளான சாஸ்திரங்களைக் கற்பது அல்லது புகழ் எய்திய ஒரு ஆன்மிக குருவுடன் நீண்ட நாட்கள் தங்குவது அல்லது சேவை புரிவது அல்லது ஆன்மிக ஸ்தாபனங்களில் சேர்வது போன்ற நன்கு அமையப்பெற்ற பாதைகள் எதையும் பப்பா பின்பற்றவில்லை. ஆனால் அவர்தம் ஆன்மிக அனுபவங்களின் வெளிப்பாடுகள் அனைத்தின் சாராம்சம் சாஸ்திர சம்மதமானதாகவும், ஞானிகளின் அனுபவ மொழிகளை ஒத்ததாகவும் அமைந்துள்ளன.
- இது அவரது வார்த்தைகளிலிருந்தே தெளிவாகிறது:
- **‘‘ராம்தாஸ் தனது ஆன்மிக வளர்ச்சிக்காக எந்த ஒரு**

**ஸ்தாபனத்திலும் சேரவில்லை. அகத்தில் உள்ள குரு மனித அறிவிற்கு எட்டாத வகைகளில் அவருக்கு வழிகாட்டி கடவுளை உணர்வதற்குத் தேவையான எல்லாவற்றையும் சுலபமாக்கினார். பிறகு அந்த அககுரு அவ்வப்போது அவருக்காக காட்டிய வழியை பின்பற்றுவதே சிறந்த முறை என்று அறிந்து கொண்டார். இது போன்ற விஷயங்களில் நமது வழிகாட்டியான குரு அகத்தே தான் இருக்க முடியும். புறத்தே இருப்பவர் அல்ல என்பது தெளிவு''.**

- **அடர்ந்த காட்டில் உள்ள மரம் ஏதொரு வழக்கமான பராமரிப்பும் கவனிப்பும் இன்றியே அழகிய பூக்களை அளிப்பதைப் போல, பப்பாவும் பாரம்பரிய பாதைகளை நாடாமலேயே ஆன்மிகத்தின் சிகரத்தை அடைந்தார்.**

## ஆன்மிகப் பாதையில் வெளிப்பட்டவை

***(1) தனது சாதனையில் பப்பா ஒரே வழியை கடைப்பிடித்தது:***

- **''தெய்வீக மந்திரத்தை இடைவிடாமல் ஜபித்துக் கொண்டும், கூடவே எங்கும் நிறைந்த, நித்தியமான, என்றும் ஆனந்தமான, உள்ளத்தில் உறையும் கடவுளை ஒருமுகப்பட்ட தியானம் செய்தும், ராம்தாஸ் வீடுபேற்றையும், சாந்தியையும், இந்த உலகை துறந்து சன்னியாசியாய் மாறுவதற்கு முன்பே, அடைந்து விட்டார்.''**

- *சாதாரணமாக ஆன்மிக சாதகர்கள், தெளிவின்மையால், பல தரப்பட்ட மார்க்கங்களை அனுசரித்து நீண்ட காலம் கழிக்கிறார்கள். அனேகமாக அது ஏமாற்றத்தில்தான்*

முடிகிறது. பப்பா விஷயத்தில், முதலிலிருந்தே தீர்மானமாய் அவர் ஒரே வழியை விடாது கடைபிடித்துக் கொண்டிருந்தார். அது அவரை குறுகிய காலத்திலேயே வெற்றியடையச் செய்தது.

- தாம் தேடும் கடவுள் அகத்தே உறைபவர் என்பதிலும், நடப்பவை எல்லாம் அவர் திருவுள்ளப்படியே நடக்கிறது என்பதிலும் பப்பா ஆரம்பம் முதலே தெளிவாக இருந்தார். இடையறாது நாமஜபம் செய்ததின் மூலம் கிடைத்த பகவத் ஸ்மரணை, அதே நேரத்தில் அவரது கல்யாண குணங்களை சதா தியானித்தல் - இவை இரண்டும் ஒரே காலத்தில் நிகழ்ந்தமையால் இந்த உண்மை குறுகிய காலத்திலேயே அவரிடம் நிலைபெற்றது.

- **சொட்டு சொட்டாக பாறையில் விழும் நீர் அதில் குழியை ஏற்படுத்த முடியுமா? ஆம்! தொடர்ந்து ஒரே இடத்தில் ஓயாமல் விழும் நீர் படிப்படியாக அந்த பாறையில் ஒரு துளையை ஏற்படுத்துகிறது. தேர்ந்தெடுத்த பாதையில் மன ஒருமைப்பாடும் விடா முயற்சியுமே ஆன்மிக முன்னேற்றத்திற்கு முக்கியமானவை ஆகும்.**

**(2) கடவுளை முழுமையாக சார்ந்திருத்தல்**

- **''இறைவன் அவர் குறித்த நேரத்தில், தனக்கே உரிய வழியில் எல்லாவற்றையும் ஏற்பாடு செய்கிறார்.''**

- நம்பிக்கை என்பது நமக்குத் தெரியாது என்று ஒப்புக்கொள்வது; கடவுள் தான் செய்கிறார் என்பதை நம்புவது ஆகும். அன்புக்குரிய பப்பாவிடம் கடவுளிடம் பாறை போன்ற உறுதியான நம்பிக்கை திடமாக இருந்தது,

*அவர் கடவுளிடம் அபார நம்பிக்கை வைத்திருந்தார். கடைசி வரையில் இது பூரணமாகவும், எந்த ஒரு நிபந்தனையும் இல்லாமலும் இருந்தது. கடவுள் தான் அனைத்திற்கும் காரணம்; ஆகையால், வாழ்வின் சுமை முழுதும் இறைவனின் தோளிலேயே இருக்கிறது என்பதையும் அவர் தெளிவாக உணர்ந்திருந்தார். .*

- *அதற்கு ஒரு உதாரணம்: ஆஸ்ரமம் நிறுவப்பட்டவுடனே, பக்தர்கள் அதை பராமரிக்க நிதி திரட்ட ஆவலாக இருந்தார்கள். ஆனால் பப்பா அந்த திட்டங்களை நிறுத்தச் சொன்னார். ஆனால், தானாக முன்வந்து சமர்ப்பிக்கப்படும் நிதியை மட்டும் ஏற்றுக்கொள்ளச் சொன்னார். ஆனந்தாஸ்ரம அறக்கட்டளை நிறுவப்பட்ட பின்னரும், நிரந்தர நிதிக்கோ அல்லது நீண்டகால வைப்பு நிதிக்கோ அதில் இடமளிக்காமல், கடவுளை மட்டுமே நம்பி செயல்பட வேண்டும்: வேறு எதையும் நம்பி அல்ல என்று அறிவுறுத்தியுள்ளார்..*

- ***நீங்கள் எப்போதாவது மிளகுக் கொடியோ அல்லது வேறு ஏதேனும் கொடியோ எந்த பிடிப்பும் இல்லாமல் வளர்ந்ததைப் பார்த்துள்ளீர்களா? அதனால் முடியாது. அவை தமது ஆதரவிற்கும் ஆதாரத்திற்கும் தாய் செடியின் தண்டுகளையே சார்ந்து தனது கொடிச் சுருள்களால் இறுக்கமாகச் சுற்றிக் கொள்கின்றன. இறைவனிடம் முழுமையான நம்பிக்கை என்பதும் அவரே எல்லாம் அறிவார்; நாமல்ல என்பதை ஏற்பதுதான். யாராவது நான் 'சுயமாக உருவாக்கப் பட்டவன்' என்று சொல்லும்போது நிச்சயமாக இறைவன் சிரிப்பதைக் காணலாம்!***

**(3) ஞானம், பக்தி, தியானம், கர்மம் மூன்றையும் ஒருங்கே சேர்த்து தக்கவாறு கடைபிடித்தல்**

- **''பக்தி மட்டுமே முழுப் பொருள் ஆகாது. ஞானம் மட்டுமே முழுப் பொருள் ஆகாது. செயல் மட்டுமே முழுப் பொருள் ஆகாது. இவை மூன்றையும் இணைத்து உன் இருப்புணர்வாம் கம்பீரத்தின் முழுமையை வெளிக்கொணர்வாய்!''**

- உண்மையில், வாழ்வில் எல்லா செயல்பாடுகளிலும் வெற்றி அடைய இந்த மூன்றுமே அவசியம். முதலில், எதையும் செய்வதற்கு முன், என்ன செய்வது என்று தெரிந்திருக்க வேண்டும்(ஞானம்), அடுத்து, அந்த செயலின் மீது வைக்கும் முழு அன்பும், நம்முள்ளிருக்கும் முழுத்திறமையையும் அந்தச் செயல்பாட்டில் வெளிக்கொண்டு வருவது(பக்தி)., இறுதியாக, முழு மன ஒருமைப்பாட்டுடன் அச்செயலை செய்வது(கர்மா). இவை மூன்றையும் மூன்று கால்கள் கொண்ட வாழ்க்கை எனும் முக்காலியுடன் ஒப்பிடலாம். முக்காலியின் ஏதேனும் ஒரு கால் உடைந்துவிட்டாலும், அது பயனற்றதாகும்.

- இவ்வாறு ஞானம், பக்தி, கர்மம் ஆகிய மூன்றையும் ஒருங்கே இணைந்து செல்லவேண்டும் என்பதை பப்பா தமது வாழ்க்கையின் மூலம் தெளிவாக்கியுள்ளார். சாதனை நாட்களிலும் கூட அவர் நாம ஜபம் மற்றும் உள்நோக்கி பயணம் மட்டுமே செய்துகொண்டு இருக்கவில்லை. அவர் அன்பு மற்றும் கருணையை காட்டும் செயல்களிலும் ஈடுபட்டிருந்தார்.

- **ஒரு சுவையான டீ அருந்த வேண்டுமானால், அதில்**

தண்ணீர், பால், சர்க்கரை மற்றும் தேயிலை என்று அனைத்து தேவையான கூட்டுப் பொருட்களும் சரியான விகிதத்தில் கலந்திருக்க வேண்டும். ஒரு பொருள் மட்டும் இருந்தால் போதாது. அது போல ஒரு சரியான பானத்தை தயாரிக்க வேண்டுமானால் ஒருவருக்கு வேண்டியது (1) அதை தயாரிக்கும் அறிவும், அதற்குரிய கூட்டுப் பொருட்களும்; (2) நல்ல தரம் வாய்ந்ததாக இருக்க வேண்டுமே என்ற அக்கறையும், அன்பும்; (3) இறுதியாக அதை தயாரிக்கும் தக்க வழிமுறை! அது போலவே, நமது சாதனையில், ஞானம், பக்தி மற்றும் கர்மா என்ற இந்த மூன்றும் தகுந்த அளவில் கலந்து இருக்க வேண்டும்.

*(4).சந்நியாசம் என்பது அகத்துறவே*

- ‘‘புறத் துறவினால் மட்டும் எந்தப் பயனும் இல்லை. சந்நியாசம் மட்டுமே எடுத்துக் கொண்டால் கடவுளை உணர்ந்து விடலாம் என்று எண்ணத்தில் சந்நியாசம் எடுத்துக் கொள்வது மிகவும் தவறான காரியம். சந்நியாசம் என்பது எவரிடமாவது வாங்கிக்கொள்ளும் விஷயமோ அல்லது எவருக்காவது கொடுக்கும் விஷயமோ அல்ல. அது கடவுளுக்காகவும், அவருக்கு சேவை புரியவும் தன்னையே அர்ப்பணித்துக் கொள்வதாகும். அது இயற்கையாக நம் இதயத்திலிருந்து எழும் பேரார்வ அலை. ஆதலால், ஒரு குருவிடமிருந்து தீக்ஷை எடுத்துக் கொள்வது அந்த சீடனை வெளித் தோற்றத்தில் மட்டும்தான் சந்நியாசியாக்க முடியும். அவன் சாதனைக்காக ஏற்படுத்தப்பட்ட நெறி முறைகளையும், கட்டுப் பாடுகளையும், கடைபிடிக்க வேண்டியுள்ளது. அந்த

**சாதனை களைப்பையும் வேதனையும் தருகிற போராட்டமாகி விடுகிறது. அந்த முயற்சியின் அடித்தளத்தில் அகங்கார உணர்வு மேன்மேலும் பெருத்து வளர்வது தவிர்க்க இயலாத ஒன்றாகி விடுகிறது.''**

- *சந்நியாசம் ஏற்பது என்பது பற்றிய பப்பாவின் அழுத்தமான கருத்துக்கள் ஒருவரின் அகநாட்டத்தை பொறுத்தே அமைந்திருக்க வேண்டும்; புலன்களால் அனுபவிக்கும் விஷயங்களில் முழு பற்றின்மை மற்றும் உலக விஷயங்களில் சுத்தமாக ஈடுபாடின்மையே அந்த நாட்டத்தைக் குறிக்கிறது. புலனின்பங்களை நாடும் மோகத்தில் இருந்து மனமும், பலனை உத்தேசித்து செய்யும் செயல்களில் இருந்து உடலும் விடுதலைப் பெற்றிருக்க வேண்டும். சர்வ வல்லமை பொருந்திய விஸ்வநாதனிடம் அவரது ஒரு பிரார்த்தனை - அவருடைய வழிகாட்டுதலின் கீழ் தங்களை முழுவதுமாக ஏற்றுக்கொண்டு 'நான்' - என்ற அகங்காரத்தை ஒழிக்க வேண்டும் என்பதே! ஆகையால் சந்நியாசம் என்பது வெறும் தலையை மழித்தலும், தலைமுடி, தாடி வளர்த்தலும், காவி துணி அணிவதும், சில விரதங்களை மேற்கொள்வது மட்டும் அல்ல. காவி துணியை ஒரு நேரத்தில் பப்பா தரித்திருந்தாலும், தமது பிற்கால வாழ்வில் வெண்ணிற ஆடைக்கு மாறினார். .*

- **பட்டுப் பூச்சி நமது தோட்டங்களில் பொதுவாக காணப்படும். ஆனால் இலையை உண்ணுகிற கம்பளிப் பூச்சி அற்புதமான உருமாற்றம் பெற்று துடிப்பான பட்டாம் பூச்சியாக மாறிட எத்தகைய ஆச்சரியத்தக்க மாற்றங்களுக்கு அது உட்பட**

**வேண்டியுள்ளது என்பதை நம்மில் எத்தனை பேர் அறிவோம்? வெளி உலகிற்கு தெரியாமல் அதன் பட்டுப்பூச்சி கூட்டின் உள்ளேயே அது நிகழ்கிறது. அதே போல், துறவு என்பதும் உள்ளேயே உருவாகும் ஒரு நிகழ்வு - அது உள்ளே நிகழும் மாற்றம்!**

**(5) சூழ்நிலைகளை தாண்டி வளர்தல்**

- **''ஒரு ஸ்தாபனம் என்பது ஒரு தோட்டத்தைப் போன்றதே! ஆன்மா என்னும் பயிரை அறுவடை செய்ய அங்கு அனைத்து வசதிகளும் உள்ளன. எப்படி ஒரு மரம் வளர்ச்சியை அடைந்தபின் வேலியைத் தாண்டி தனது கிளைகளை சுதந்திரமாக காற்றில் பரவ விடுகின்றதோ அல்லது எப்படி ஒரு மாணவன் பள்ளி வாழ்க்கையைத் தாண்டி உலக வாழ்க்கைக்கு கால் வைக்கிறானோ அது போலவே கடைசியில் உன்னதமான, உண்மையான, பூரணமான வாழ்வின் தரிசனம் பெற அந்த ஸ்தாபனத்தையும் அவன் கடந்துச் செல்லலாம்.''**

- சாதகர்கள் விரைந்து ஆன்மிக முன்னேற்றம் அடைய ஏதாவது ஒரு ஆஸ்ரமத்திலோ, ஸ்தாபனத்திலோ சேர்கிறார்கள். நாட்கள் செல்லச் செல்ல அவர்கள் அறியாமலேயே மற்ற விஷயங்கள் முன்னுரிமை பெறுகின்றன; சேர்ந்த நோக்கம் புறக்கணிக்கப்படுகின்றது. அதனால் ஆன்மிகப் பரிணாம வளர்ச்சி நசுக்கப்படுகிறது. இதன் விளைவோ முற்றிலும் நெறிப்படுத்தப்பட்ட அடிமை வாழ்வாக இறுதியில் முடிகின்றது. அடைய வேண்டிய முக்கிய குறிக்கோளான முக்தியை அளிக்கும் முன்னேற்றப் பாதை தடைபடுகிறது.

- ஆகவே, ஆன்மிக ஸ்தாபனங்களில் தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள் எந்த நோக்கத்திற்காக சேர்ந்தனரோ அதில் மிகுந்த விழிப்புணர்வுடன் இருப்பது அவசியம். எல்லா செயல்பாடுகளும் அறுதி குறிக்கோளான இறை அனுபூதியை அடைவதற்கே இருக்க வேண்டும்.

- சாதகனின் ஒரே குறிக்கோள் ஆஸ்ரமத்தின் உள்ளேயும் சரி, வெளியேயும் சரி, தான் வசிக்கும் எல்லா இடங்களிலும், அது சிறந்ததோ அல்லது சிரமமானதோ எப்படியிருந்தாலும் அங்கே சந்தோஷத்துடன் இருப்பதேயாகும்.

- **தெருவோரத்தில் நடப்படும் செடிகளை வேலி போட்டு பாதுகாக்க வேண்டியது அவசியம்! ஆனால் அவை நன்கு வளர்ந்து பெரிய மரங்கள் ஆனவுடன் அவைகளுக்கு எந்த பாதுகாப்பும் தேவை இல்லை; வேலிகளை தாண்டி அவை வளர்கின்றன. அது போல், ஒருவரின் ஆன்மிக வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்தில் ஒரு 'ஸ்தாபனம்' என்னும் வேலி தேவையேயாகும். அதே சமயம் அந்த ஆன்மிக வளர்ச்சி மேலும் செழித்து வளர, ஸ்தாபனத்தின் குறுகிய கட்டுப்பாடுகள் என்னும் எல்லைகளைக் கடந்து, உயர்வதும் அவசியமான ஒன்றே! இது ஏதோ ஆசிரமக் கடமைகளை மறுத்துரைப்பதோ, அல்லது, உதாசீனம் செய்வதோ அல்ல. ஏனெனில், அத்தகைய ஸ்தாபனங்கள் ஆரம்ப சாதகர்களுக்குத் தொடர்ந்து பயனளிப்பதாகவே உள்ளன.**

### (6) இடையில் ஒருவர் தேவையில்லை

- **''கடவுளுக்கு தன் கட்டளைகளை பிறரிடம் எடுத்துச்**

**செல்ல இடையே எவரும் தேவை இல்லை. கடவுள் ராம்தாஸ் மூலமாக பேசமுடியும் என்றால், அதே மாதிரி உங்கள் வழியாகவும் அவருக்குப் பேசமுடியும். ஏனெனில், நீங்கள் கடவுள் பாரபட்சமானவர் என்று அவரை பழிசுமத்த முடியாது. உங்கள் உள்ளத்தில் ஒரு நேரடி தொடர்பு நிலையை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் இதயத்தில் அவருக்கு இடமளிக்க மறுக்கலாமா?''**

- ஒவ்வொருவரிலும், ஒவ்வொரு பொருளிலும், அது எவ்வளவு சிறிதாயினும், கடவுள் முழுமையாகவும், பூரணமாகவும் குடி கொண்டுள்ளார். நாம் அவரை அறிந்தாலும், அறியாவிட்டாலும், அவரை போற்றினாலும், போற்றாவிட்டாலும், அவரை பொருட்படுத்தினாலும், பொருட்படுத்தாவிட்டாலும் அவர் எப்போதும் நம்முடனேதான் இருக்கிறார். அவரது சாந்நித்யத்தை உணர உள்நோக்கி செல்ல நீங்கள் ஏன் உடனே தொடங்கக் கூடாது?

- ஞானிகளும், தீர்க்கதரிசிகளும் அந்த இறை நிலையை அடைய நமக்கு வழி காட்டினாலும், நமது சுய சாதனையால்தான் நாம் அதை அடைய இயலும்.

- அதற்கு வெளியில் இருந்து இடையில் ஒருவர் தேவையில்லை. ஆயினும், இந்த உண்மையை அறிவதற்கு இடையில் ஒருவர் தேவைபடுகிறார். அவரையே குரு என்கிறோம்.

- ஒரு பயணத்திற்கு சிறந்த வழிகாட்டியாக வரைபடம் இருந்தாலும் நாம் சேரும் இடத்திற்கு அது நம்மை அழைத்துச் செல்லாது. பயணத்திற்குத் தேவையான

எல்லா ஏற்பாடுகளும் செய்து கொண்டு வழித் தகவல் களையும் சேகரித்து வைத்துக் கொண்டு நாம்தான் நம் இலக்கை நோக்கிப் பயணிக்க வேண்டும்.

- ***விடியற் காலையில் மலைப்பாங்கான பகுதியில் நடந்து சென்று அமர்ந்து சூரிய உதயத்தைக் காண்பதாக கற்பனை செய்யுங்கள். சுற்றியுள்ள செடிகளும் மரங்களும் சூரியனின் ஒளிக் கதிர்களால் நிறைகிறன. தாவரங்கள் சூரிய ஒளியின் 'ஒளிச்சேர்கையால்' சக்தியை உற்பத்தி செய்கின்றன. சூரியனுக்கும் எண்ணற்ற தாவரங்களுக்கும் இடையே ஒன்றும் இல்லை. அதே போல், படைப்புகளுக்கும் படைப்பாளிக்கும் இடையே எவருமே தேவையில்லை.***

### (7) படைப்புகளிடம் நம் பொறுப்பும் கடமையும்

- ***''மனித குலத்தின் ஒட்டுமொத்த மகிழ்ச்சிக்கும் இணக்கத்திற்கும் தனியொருவன் அளிக்கும் பங்கைப் பொருத்தே ஒருவனின் சாந்தியும் வீடுபேறு அடைதலும் சார்ந்துள்ளது என்பது நிச்சயம்.'' .***

- *நாம் அன்னையின் கருவறையில் இருந்து வெளியே வரும் போது நாம் எதையும் எடுத்து வரவில்லை. அவருடைய படைப்பான இயற்கை அன்னையும் சமூகமும் நம் வாழ்க்கையின் அனைத்து தேவைகளையும் வசதிகளையும் அளிக்கின்றன. இன்னொரு வகையில் சொல்லப் போனால், நாம் வாழ்வதே நாம் அல்லாத இந்த இரண்டு அமைப்புகளால்தான். அதனால் நாம் எப்படி 'நான்' 'எனது' என்று மட்டுமே நினைக்க முடியும்? நாம் 'தனித்துவத்தில்' இருந்து 'விஸ்வ மயமாக' அல்லது 'நான்'*

என்பதிலிருந்து 'நாமாக' என்னும்படியான விசாலமாக வேண்டாமா? இந்த கருத்தையே மேலே உள்ள வார்த்தைகள் மூலம் பப்பா வலியுறுத்துகிறார்.

- இன்னொரு கோணத்தில் சொல்லப் போனால், எந்த மனிதனும் தானே ஒரு முழுமையான தீவாகிவிட மாட்டான். மாறாக, அவன் அந்த முழுமையின் ஓர் அங்கமே! ஒருவருக்கொருவர் மற்றவரை சார்ந்தும், இணைந்தும் மட்டுமே இருக்கின்றனர். எனவே ஒரு சாதகன் தன்னை மற்றப் படைப்புகளிலிருந்துத் தனிமைப் படுத்திக் கொள்ளக்கூடாது.

- அதனால், நாம் மேற்கொள்ளும் எந்தவொரு ஆன்மிக சாதனையும், அது நம்மை சுற்றியுள்ள மக்கள் மேன்மை அடைவதற்குரியதோர் இணக்கத்தை உருவாக்குவதாக இருப்பது அவசியம். மெல்ல,மெல்ல, நமது செயல்கள் அனைத்தும் அன்பு மற்றும் சேவை வடிவத்தில் இறைவனுக்கு செய்யும் பூஜையாக பரிணமிக்க வேண்டும்.

- **ஆன்மிக சாதனையின் குறிக்கோளே நாம் அனைத்து மக்களின் நன்மைக்காக நம்மை அளிப்பதே! ஊதுவத்தி தனது செயலின் விளக்கம் மூலம் இதை எடுத்துக் காட்டுகிறது. அதன் நறுமணம் காற்றில் தவழ்ந்து எல்லா இடங்களில் பரவுவதை காணலாம். அதே போல நமது சாதனை எந்த விதத்திலாவது அனைத்து மக்களின் மேன்மைக்கு உதவக் கூடியதாக அமைய வேண்டும்.**

**(8) ஆன்மிகம் என்பது தியான வாழ்க்கை மட்டுமல்ல**

- **''கடவுளின் சக்தியிலும், பிரகாசத்திலும் நிறைந்து,**

**சுறுசுறுப்பாக இரு. மதத்தின் பெயரால், எல்லா செயல்பாடுகளும் தவறு என்று சொல்லிக்கொண்டு, நிரந்தரமாக துறவு வாழ்க்கை வாழ்வதை உன் குறிக்கோளாகக் கொள்ளாதே!.''**

- எவரும் தியான வாழ்க்கையை மட்டுமே மேற்கொள்வதைப் பப்பா நிச்சயம் வலியுறுத்தவில்லை.

- ஒருவன் தன் சகமாந்தர்களுக்குத் தன்னலமற்ற உணர்வுடன் உதவ வேண்டும். ''தன்னைப்போலவே அருகில் வசிப்பவரையும் நேசி'' என்றால், அன்பானது உள்ளத்தில் மட்டுமே உணரப்பட வேண்டும் என்பது பொருள் அல்ல. மற்றவர் துயரத்தை துடைப்பது, இயன்றவரை எல்லா வழிகளிலும் உதவுவது போன்ற செயல்களிலும் அந்த அன்பை வெளிப்படுத்த வேண்டும். மனிதனுக்கு செய்யும் சேவையே கடவுளுக்கு செய்யும் சேவை ஆகும். கர்ம யோகத்தில் வேலையே வழிபாடு. அப்போதுதான் அது மகிழ்ச்சியை கொடுக்கும். அதை முடிந்த அளவு சரியாக, மிகுந்த அக்கறையுடனும், அன்புடனும், செய்யவேண்டும், கவனக் குறைவாகவோ, அலங்கோலமாகவோ, அரை மனதுடனோ செய்யக் கூடாது. அகத்தின் அழகு புற நடத்தையில் தெரியவேண்டும்.

- **குழந்தைகள் பம்பரம் விளையாடுவதைப் பார்த்திருப்போம். அது கயிற்றில் இருந்து விடுபட்டவுடன் வேகமாக தரையில் சுழலும். அப்போது பார்த்தால் அது அசைவற்று ஆழ்ந்த தியானத்தில் இருப்பதைப் போல தோன்றும். அது போல, ஒருவர் புறவாழ்வில் மிகுந்த செயல் புரிபவராகவும், அதே சமயம் அகவாழ்வில் ஆன்மிக**

**தியான வாழ்க்கையை மேற்கொள்பவராகவும் இருத்தல் வேண்டும்.**

## *(9)* நேரடி ஆன்மிக அனுபவமே முக்கியம்

- **''உன்னுடைய சாதனை முறை எந்தவித வெளியுலக சூழ்நிலை யையோ, வடிவத்தையோ, நிபந்த்னையையோ சார்ந்திருக்கக் கூடாது. இவை அனைத்திற்கும் அப்பாற்பட்டதாக, அகமுகப் பட்டதாக இருக்க வேண்டும்.''**

- பப்பா பக்தர்களுக்கு கூறியது அல்லது எழுதியது எல்லாமே அவரது நேரடியான சுய அனுபவத்திலிருந்தே உதித்தவை; அவை ஆன்மிக நூல்களிலிருந்தோ அல்லது பாடப் புத்தகங்களிலிருந்தோ தொகுக்கப்பட்டவை அல்ல; வெளி அம்சங்களால் மனம் கட்டுக்கு உட்படாமல் இருக்கும்படி அவர் தன்னை நாடியவர்களிடம் வலியுறுத் தினார்; சொந்த ஆன்மிக அனுபவங்கள் மூலம் அவர்களை உள்நோக்கி செல்லும் பயணத்தை மேற்கொள்ளும்படி தூண்டினார்; இது சாதகர் களுக்கு ஆன்மிக முயற்சியில் தெளிவையும், தன்னம்பிக்கையையும், உறுதியையும் அளிக்க வல்லது.

- ''அதனால், இந்த பொருள் குறித்த அவரது எழுத்துக்கள் அவரது சொந்த அனுபவங்களைக் கொண்டே அமைந்துள்ளன. அறிஞர்கள் மற்றும் சாஸ்திரங்கள் அவருக்கு இரண்டாம் பட்சமே.''

- வெளியிலிருந்து வரும் எதுவும் நமதாக முடியாது. ஏனெனில் அது நமது அனுபவமில்லை; அதனால் ஒரே வழி உள்ளிருந்து கிடைப்பதில் நம்பிக்கை கொள்வதுதான்.

- உள் ஆராய்ச்சி, மனனம், ஜபம், தியானம் இவைகளை செய்யும் போது கிடைக்கும் ஆன்மிக பக்குவத்தை பரிசோதிப்பதற்கு நமது தினசரி வாழ்க்கை நமக்கு நல்ல வாய்ப்பை அளிக்கிறது.

- ஒவ்வொரு நாள் வளர்ச்சியும் உண்மையில் நமக்கே சொந்தம் என்று காணக்கூடிய சோதனைத் தளம் அது. அதை பரிசோதித்து, நிரூபித்து, உடமையாக்கிகொள்வதன் மூலம் அதனை நமக்கே சொந்தமாக்குகிறோம். அதை பரிசோதித்து நமது அன்றாட வாழ்வில் நிரூபிக்கும் வரையில் அது நமக்கு சொந்தமல்ல, அது நமது வாழ்க்கையின் ஒரு பாகமாவதில்லை.

- தோட்டத்தில் எல்லா காய்கறிகளும் வளர பொதுக் **காரணங்களான நீர், உரம், காற்று மற்றும் சூரிய ஒளி ஆகியவை தேவை. இவை ஒவ்வொன்றும் தன்னிகரற்றவை; தனக்கேத்தான சுவையை வெளிப்படுத்தக் கூடியவை - உதாரணத்திற்கு, பாகற்காய்க்குரிய கசப்பும், நாட்டு தக்காளிக்குரிய புளிப்பும், மிளகாய்க்கு உரிய காரமும் தனித்து விளங்குபவை. அதே போல, ஆன்மிக சாதகனின் குறிக்கோள் வெளிக்காரணங்கள் மற்றும் சூழ்நிலைகளால் அலைகழிக்கப்படாமல் தனக்குள் திகழும் தனித்தன்மையை அடைவதாக இருக்க வேண்டும்.**

### *(10)* புற வடிவங்களில் சிக்காமல் இருப்பது

- **‘எப்பொழுதும் புற ஆதாரத்தைப் பற்றிக்கொண்டு தொங்கிக்கொண்டிருத்தல் ஒருவனின் ஆன்மிக வளர்ச்சிக்கு தடங்கலாகும். ஏனெனில் அவனது**

**பார்வை விசாலப்படவும், உலகளாவியதாகவும் வளைந்து கொடுக்கும் தன்மை இல்லாமல் போய்விடும். அவனது நோக்கம் எல்லையற்றதான மெய்ப்பொருளை புரிந்துணர்வதாக இருக்கவேண்டும் என்னும்போது, புற ஆதாரங்களைப் பற்றிக் கொள்ளுதல் அவனுடைய ஆர்வத்தை நெருக்கமாகவும், சிறிய எல்லைக்குள் உட்பட்டதாகவும் குறுக்கிவிடுகிறது.''**

- *பூஜ்ய மாதாஜி பப்பாவின் உருவத்தை போற்றி, எங்கும் நிறைந்த பரம்பொருளை பப்பா என்று அழைத்ததால் பலர் அவரை கடவுள் என்றே பாவித்தனர். அதனால் அவர்கள் பப்பாவின் உருவத்தை ஆராதித்தும், எல்லாம் அவராலேதான் என்ற மனப்பாங்கை ஏற்படுத்திக் கொண்டதனாலும் பெருத்த திருப்தி அடைந்தனர். இந்த எளிய நம்பிக்கை ஒருவனது ஆன்மிக வளர்ச்சிக்கு பங்கம் ஏதும் விளைவிக்காது என்பது உண்மைதான்! இந்த எளிய நம்பிக்கை யினால் சாதகனுக்கு ஏற்படும் நெஞ்சை உருக்கும் உணர்வும், மனக்கிளர்ச்சி யும், ஆனந்தம், திருப்தி, வழிகாட்டுதல், பாதுகாப்பு இவற்றை அளிக்கிறன என்பதும் உண்மைதான். ஆனாலும் உள்ளத்தில் ஆழ் பொருளை பற்றிய விழிப்புணர்வு இல்லாமல் அவை மட்டுமே ஒருவனை சாஸ்வத நிலைக்கு எடுத்துச் செல்லாது. இதன் பொருள், சாதகர்களின் குறிக்கோள் பரம்பொரு ளுடன் ஒன்று சேர்வது என்பதால், அவர்கள் நாம, ரூபங்கள் போன்ற எந்தவித புற ஆதாரங்களிலும் பற்று வைக்கக் கூடாது என்பதே.*

- *அகக் குருவை சார்ந்த சுய சாதனையால், ஆத்ம உணர்வு*

*நிலையில் நாம் நிலைபெற்றிருக்க வேண்டும் என்று பப்பா விரும்புகிறார். புற குரு அவரது ஸ்பர்சத்தால் நம்மை விழித்தெழச் செய்து, நம் மனதை நம்முள் உள்ள கடவுளிடம் திருப்பலாம். சரியான மனோபாவத்துடன் ஒரு குருவுக்கு பணிவிடை செய்வது சாதனைக்கு ஓரளவு பயன் தருமென்றாலும், ஆன்மிக சாதகர்கள் குருவின் உருவத்தில் மட்டும் மனதை ஒருமுகப்படுத்த வேண்டும் என்று ஒருபோதும் பப்பா வலியுறுத்தியதில்லை. இது சரியாக புரியாவிடில், பலருக்கு பூரணம் அற்றத்திலிருந்து பூரணத்திற்கு (பகுதியிலிருந்து முழுமைக்கு) செல்வது தடையாகவே இருக்கும்.*

- ***ஒரு கட்டிடம் கட்டும்போதும், பழுது பார்க்கும்போதும், சுத்தம் செய்யும் போதும் அதற்கு மரக் கட்டைகள், இரும்பு கம்பிகள் கொண்டு சாரம் கட்டப் படுகிறது. அந்த வேலை முடிந்த வுடன் அது அகற்றப் படுகிறது. புறச் சார்பு சில காலத்திற்கு நல்லதாக இருக்கலாம். ஆனால் நிரந்தரமாக அல்ல. ஆரம்ப காலத்தில் ஒரு குருவின் உதவி மிக மிக அவசியமே! ஆனால் பின்னர் சாதகர் அகக்குருவையே நாட வேண்டும்.***

## ஆன்மிக சிகரத்தில் வெளிப்பட்டவைகள்

### *(11) வாழ்வின் குறிக்கோள் ஆனந்தமே!*

- ***‘‘உண்மையான சாதகனின் கண்ணோட்டம் நம்பிக்கையோடு இருப்பது. அவனது கண்கள் எங்கும் எதிலும் அழகையும், நல்லதையும், அன்பையும் மட்டுமே காண்கிறன. ஒவ்வொரு நிகழ்விலும் அவன் நம்பிக்கை, மற்றும் சாதனையில் வெற்றி***

**பெறுவதற்குண்டான அறிகுறிகளைக் காண்கிறான். இவ்வாறு, அவனை முடக்கத் துடிக்கும் மனச்சோர்வை அவன் வெல்கிறான். அவன் முகம் பிரகாசமாகவும், உற்சாகத்துடனும் இருக்கிறது. அவன் வாழ்க்கையையும், அதிலிருந்து அவன் பெறும் வெற்றி தோல்விகளையும் கடுமையாக எடுத்துக் கொள்வதில்லை. அவனது இதயம் லேசாக உள்ளது. எனவே நகைச்சுவையை ரசித்து மனதார தன்னை மறந்து சிரிக்கிறான். அவன் ஒரு குழந்தையைப் போல் வெளிப்படையாகவும், விளையாட்டுத்தனமாகவும் இருந்துகொண்டு, அவன் இருக்கும் இடமெல்லாம் ஒரு மகிழ்ச்சியான சூழலை உண்டு பண்ணுகிறான். மகிழ்ச்சி அவனிடம் இயல்பாக இருக்கிறது. அதனால், அவனது எண்ணங்கள், வார்த்தைகள், செயல்கள் மூலமாக அவனுடன் தொடர்புள்ளவர்கள் எல்லாம் அவனைப் போலவே சுதந்திரமாகவும், சந்தோஷமாகவும் ஆகிவிடுகிறார்கள். ஆனந்தமே ஆண்டவனின் இயல்பு. இறுதியில் அவரது பாதங்களை அடைந்ததும் அவரது பிரகாசமான இருப்பில் உன்னை இழப்பதோடு, நீயே அந்த ஆனந்தம் ஆகிவிடுகிறாய்’’.**

- மேற்காணும் நற்குணங்களை பப்பா தனது வாழ்க்கை முழுதும் நடைமுறைப் படுத்தி உள்ளார். பக்தர்களிடம் அளவளாவும் போதோ, பெருங்கூட்டத்தில் பேசும்போதோ, ஆஸ்ரம விஷயங்களை கையாளும்போதோ. அவரது வாழ்க்கை நிகழ்வுகளை அல்லது பார்த்த விஷயங்களை தனக்கே உரிய வழியில் விவரித்துக் கூறும்போதோ கேட்பவர்களை சிரிப்பு

வெள்ளத்தில் ஆழ்த்தி விடுவார். சம்பவத்தை விட அதனை எடுத்துச் சொல்லும் விதத்தில்தான் நகைச்சுவை அதிகம் என்பதை அவர் நன்கு அறிவார்.

- ஆனந்தம் என்பது ஒரு முழுமை உணர்வு! ஒருவர் அமைதியாக, தெளிவுள்ளவராக, சாந்தமாக, தன்னடக்கம் மற்றும் தன்னிறைவு உடையவராக ஆனந்தத்தில் மூழ்கியிருக்கும் போதுத் திகழ்கிறார். இல்லாமை என்பது ஏதும் இல்லை. எப்பொழுதும் இருக்கும் அந்த ஆனந்தத்தை நாம் அடைந்து விட்டால் உலகிலேயே மிக மேன்மையான விஷயத்தை அடைந்ததாக உணர்வோம். இதற்குமேல் அடைவதற்கு ஏதுமில்லை.

- நீங்கள் ஒரு செடியை தோட்டத்தில் நடுவதாக கற்பனை

- செய்யுங்கள். அந்தச் செடி எப்போது பூக்கும் என்ற ஆனந்த தருணத்தை ஆவலுடன் எதிர் கொள்ள மாட்டீர்களா? ஒரு தோட்டம் மலர்களால் பிரகாசிக்கும்போது அதை பார்ப்பவர் முகத்தில் எப்போதும் புன்னகையை கொண்டு வரும். வாழ்க்கை என்பது இறைவன் வழங்கிய வரம். வாழ்க்கையில் ஈடுபாடும், நல்லதே நடக்கும் என்ற மனோபாவமும் நம்மிடம் இருந்தால் நாம் அதன் ஒவ்வொரு தருணத்தையும் நம்பிக்கையுடன் கொண்டாடுவோம்.

## (12) இரண்டற்ற நிலையை அடைந்தும் இருமையில் செயலாற்றுவது

- **''பரம்பொருளின் பூரண உணர்வு நிலையில், அதன் முழுமையான தரிசனம் அடையப் பெற்று, பிரிவினைகள் கரைந்து ஒன்றில்(ஏக ஸ்துவில்)**

**அடங்கிய சிகரத்தை அடைந்த பின்னரும், அந்த இறை அநுபூதி வாய்க்கப் பெற்ற ஆத்ம ஞானி அந்த சாஸ்வத நிலையில் இருந்து சற்று விலகி உண்மையற்ற ஒரு நிலையை பாவித்துக் கொள்கிறார். அவர் தன்னை கடவுளின் பிள்ளையென்றோ, குழந்தையென்றோ, சேவகனென்றோ, அல்லது பக்தனென்றோ சொல்லிக்கொள்கிறார்.''**

- *தெய்வீகப் பாதையில் பப்பா பக்தியை முதல் அடியாக கருதினார். பகவானிடம் பக்தன் கொள்ளும் நெருக்கமான உறவே பக்தி. பாரம்பர்யமாக இறைவனை ஏதேனும் ஒரு தெய்வத் திருவுருவாக பாவித்து பக்தி செய்வதே வழக்கமாக உள்ளது. ஆனால் பப்பாவோ அதே பக்தியை அன்பு, ஞானம் மற்றும் சக்தி வடிவங்களிலே இறைவனிடம் செலுத்தினார்.*

- *கடவுளும், தானும் ஒன்றேதான் என்று அவர் உணர்ந்த பிறகும், தான் கடவுளின் குழந்தை அல்லது அவரது சேவகன் என்ற இரு உறவுகளை ஏற்படுத்திக் கொண்டு பப்பாவால் பேணி அனுபவிக்க முடிந்தது. அன்பு என்பது இரண்டு என்ற தளத்தில் தான் செயல் படுகிறது. அவரது அனைத்து செயல்களும், பெரியதானாலும், சிறியதானாலும், அன்பின் முத்திரையை தாங்கியிருக்கும். ஏனெனில் அன்பே அவரது இருப்பு நிலை; அன்பே அவரது உயிர்; மற்றும் அவர் அன்பிலேயே தன் இருப்பின் நிறைவைக் கண்டார்.*

- **குயவன் கெட்டியான ஈரக் களிமண்ணை சக்கரத்தில் இட்டு மிருதுவான மண்ணாக்கி பானை ஆக்குவதை நீங்கள் பார்த்துள்ளீர்களா? அப்போது மண்**

**என்னவாகிறது? அதன் மூலப் பொருளை அப்படியே தக்க வைத்துக் கொண்டு அது ஒரு உபயோகமான பொருளாக மாறுகிறது. அது போல, பேரன்புக்குரிய பப்பா இரண்டற்ற நிலையை அடைந்த பின்னரும், நமக்கு தென்படும் இரண்டான நிலையில் இருந்து கொண்டு மனித குலத்திற்கு தொடர்ந்து சேவை புரிந்தார்.**

**(13) படைப்புதிறனுடன் சுயமாக இருப்பது**

- **''நீயே உனக்கு ஒளியாக இரு. உன் சுய வழியிலேயே, தெளிவு பெற்ற உன் வாழ்க்கையின் மகத்துவத்தை வெளிப்படுத்து. ஆக்கப்பூர்வமாக உயர்ந்து இரு, உனக்குள் உள்ள அந்த எல்லையில்லா சக்தியை சுதந்திரமாக வெளிப்படுத்து.''**

- கடவுளின் பல வகை படைப்புகள் ஏற்படுத்திய எல்லா வளங்களின் சேர்க்கையின் ஒன்று திரண்ட முயற்சியினாலேயே இந்த முழுப் படைப்பும் இருந்து கொண்டிருக்கிறது. மற்றபடி சொன்னால், மனிதனுக்கு பலவித ஆற்றல்கள் அளிக்கப் பட்டிருக்கின்றன. நம்முடன் வாழும் சக உயிரினங்களின் தேவைகள் அனைத்தையும் சிறந்த முறையில் பூர்த்தி செய்ய அந்த ஆற்றல்கள் தூண்டப்பட்டு.புதிய, புதிய கண்டுபிடிப்புக்களை மனித சமுதாயம் வெளிக்கொண்டு வர வேண்டும்.

- ஒவ்வொரு படைப்பும் தன்னிகரற்றது. அதனால் நம் முயற்சி நமது நிகரற்ற அத்தன்மையை அறிந்து வெளிக் கொணரக் கூடியதாக இருக்க வேண்டும். மனித குலத்தின் மூலமாக எல்லாத் துறைகளிலும் பல்வேறு ஆக்கப்பூர்வமான சக்திகளால் சீரான வளர்ச்சி

வெளிப்பட்டிருப்பதே இதற்குத் தக்க சான்றாகும். இது கண்கூடு! நாம் இந்த உலகத்தைக் காணும் போது அறியலாம்.

- **நீங்கள் எப்போதாவது ஒரு சிற்பி ஒரு மரத்தில் இருந்தோ அல்லது கல்லில் இருந்தோ ஒரு உருவத்தை செதுக்குவதை கண்டதுண்டா? அவர்கள் அந்த உருவத்தை கற்பனையில் அதில் கண்டு கொண்டு, உருவமற்ற அதன் இதரப் பகுதிகளை தட்டி நீக்குகிறார்கள். அது போல, நமக்குள் இருக்கும் தேவையற்ற கசடுகளை நீக்கி, அனைவரின் மேன்மைக்காக நமக்கு உள்ளே அளிக்கப்பட்டிருக்கும் எல்லையற்ற படைப்புத்திறனை வெளிக் கொணருவது அவசியம்.**

## (14) ஆன்மிகத்தில் சுய இச்சைக்கு இடமே இல்லை

- உண்மையில், மனிதனுக்கு சுய விருப்பம் என்று ஒன்று இல்லவே இல்லை. எல்லாவற்றிலும், எல்லாவிடத்திலும் இயங்குவது தெய்வ இச்சை ஒன்றே. தனி மனிதர்களாக எதுவும் செய்ய நமக்கு சக்தி யுள்ளதாக நினைப்பதே தவறு. இறைவனே எல்லாவற்றின் பின்பும் இருக்கிறார்.

- நமது உடலை கூர்ந்து நோக்கினால் பல வகையான இயக்கங்களும், மாற்றங்களும் நம் உடலுக்குள் நடப்பதை காணலாம், அதாவது ஜீரண உறுப்புகளின் செயல்கள், இரத்த ஓட்டம், முடி வளர்வது போன்றவை. இவைகளெல்லாம் தனிமனிதர்களாக நம்மால் ஏதும் செய்யப்பட வில்லை என்பதும், நமக்கு அப்பாற்பட்ட ஒரு சக்திதான் இந்த இயக்கங்களுக்கு பொறுப்பு என்பதும் நமக்கு நன்றாக தெரியும். அதே சக்திதான் நமது புற

இயக்கங்களுக்கும் பொறுப்பாக செயல்படுகிறது. அந்த சக்தியின் வெளிப்பாடின்றி, தனித்தன்மையின் இருப்பு இருக்க இயலாது.

- ஆன்மிக வளர்ச்சி என்றால் ''நான்'', ''எனது'' என்னும் இவைகளின் ஆதிக்கத்தை குறைப்பது என்று பொருள் என்பதை பப்பா தனிமனிதனுக்குத் தெரிவிக்கிறார். இறுதியில் எல்லா உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் பொருள்களையும் எனக்கே சொந்தம் எனக் கொண்டாடும் பாவனையை உண்மையான உரிமையாளரிடம் மாற்றித்தர வேண்டும்.

- **பொம்மலாட்டம் இந்தியாவின் ஒரு பழமையான கலை; பொம்மலாட்டத்தில் பல்வேறு கதா பாத்திரங்களாக மேடையில் அரங்கேறினாலும். அவற்றை பொம்மலாட்டக்காரர் தான் இயக்குவார்; பொம்மைகள் தாமாக இயங்க இயலாது; அதன் இயக்கங்களை இயக்குனர் ஒரு நூலின் இணைப்பைக் கொண்டு கட்டுப்படுத்துவார். அது போல, நம் வாழ்க்கையும் இறைவனின் கையில் தான் உள்ளது. சுய இச்சை என்பதற்கு ஆன்மிகத்தில் இடமே இல்லை.**

### *(15) ஞானம் கடினமானதை எளிமையாக்கும்*

- ''வாழ்க்கை என்பது ஆத்மாவின் வெளித்தோற்றம். இரண்டாக தோன்றினாலும் அவை ஒன்றேயாகிய ஏகான்ம வஸ்துதான்!.''

- உயர்ந்த ஆன்மிக போதனைகளையும், ஆழ்ந்த வேதாந்த கருத்துகளையும் எவ்வாறு எளிதாகவும், தெளிவாகவும், நேர்மையாகவும் தெரியப்படுத்துவது? இதற்கான பதிலை

பப்பாவின் உரையாடல்களிலும், கட்டுரைகளிலும் காணலாம். ஒவ்வொரு சிக்கலான விஷயத்திலும் அவரது எண்ணங்கள் தெள்ளத் தெளிவாக இருக்கும்; அவரது உபதேசங்கள் எளிதாகவும், எல்லோரும் நன்றாக புரிந்து கொள்ளும்படியும் இருக்கும்; அன்றாட வாழ்வில் நமக்கு தெரியாத சுலபமாக புரிய வைக்கும் யுக்தியில் சாதாரண சில நிகழ்வுகளுடன் நம்மை தொடர்புபடுத்தி அவர் விளக்குகிறார். அது அவருக்கு பள்ளிக் கல்வியை போதிப்பதுபோல அல்ல; அதன் மூலமாக அவர் தனது அதி உன்னத அனுபவத்தைத் திறந்து காட்டுகிறார்.

- மேலே குறிப்பிட்டுள்ள கூற்றிலே, ஆத்மா என்ற ஆழமான சொல்லை நாம் புரிந்துகொள்ள பப்பா சில நடைமுறைக் குறிப்புகளை நமக்கு தெரிவிக்கிறார். உயிர்ச்சக்தி விவரிக்க முடியாததாக இருந்தாலும் அதன் சாந்நித்தியத்தை நாம் எல்லோருமே அனுபவிக்கிறோம்.

- ஆழ்ந்து நோக்கும் போது தனிமனிதனின் இருப்பு விஸ்வமய (இறைவனின்) வாழ்க்கையின் வெளிப்பாடான காற்று, நீர், சூரியன், வெட்டவெளி, பூமி, எரிவாயு, உலோகம், கனிமப் பொருள்கள், உயிர்சத்து, தாவரங்கள் போன்றவற்றின் இருப்பில்தான் உள்ளது. இன்னொரு கோணத்தில் சொல்ல வேண்டுமானால், தனி மனிதனின் ஞானேந்திரியங்களும், கர்மேந்திரியங்களும் விஸ்வநாதனால் தான் அளிக்கப் பட்டிருக்கின்றது. அந்த தனிமனித உணர்வு இருப்பது அந்த விஸ்வமய உயிரோட்டத் தினால்தான் என்று அறிவுப் பூர்வமாக புரிந்துகொள்வது எவருக்கும் எளிது.

- **நீங்கள் வீட்டில் உள்ள மின்சாரப் பெட்டியை திறந்து பார்த்தால் மிகவும் சிக்கல் நிறைந்ததாக இருப்பதைக்**

**கண்டு ஆச்சரியம் அடைவீர்கள். நிறைய ஒயர்கள் பல வண்ணங்களில் அங்கும் இங்குமாக சுற்றிக் கொண்டு இருப்பதைக் காணலாம். அதே பெட்டியை மூடி விட்டால், பார்ப்பதற்கு ரொம்ப எளிமையாகவும் சுலபமாக இயக்கும் விதத்தில் அமைந்திருக்கும். அதே போலவே, சிக்கலான பல ஆன்மிக விஷயங்களைக்கூட பப்பா மிக எளிமையாக விளக்கியுள்ளார்.**

### (16) எந்த பிரிவையும் சேர்ந்தவரல்ல பப்பா

- *''ராம்தாஸ் எந்த பிரிவையோ, கொள்கையையோ சேர்ந்தவனல்ல. அப்படி அவன் ஏதாவது ஒரு பிரிவையோ, கொள்கையையோ சேர்ந்திருந்தால், அவனது சுதந்திரம் ஒரு எல்லைக்கு உட்பட் டிருக்கும்.''*

- *கண்மூடித்தனமாக எந்த பிரிவை பின்பற்றுவதாக இருந்தாலும் அது சாதனைக்கு ஒரு தடையாக இருந்திருக்கும் என்று பப்பா நம்பினார்.*

- *பல்வேறு மதங்கள், பிரிவுகள், மற்றும் பல்வேறு நாடுகளை சேர்ந்தவர்களின் கண்டுபிடிப்புகளையும் அதன் பலன்களையும் மக்கள் அனைவரும் பேதமின்றி மகிழ்வுடன் அனுபவிக் கின்றனர். உண்மை இப்படி இருக்கும்போது நமது அன்பையும் பாசத்தையும் ஒரு பிரிவினருக்கு மட்டுமே எப்படி அளித்து எல்லைக்கு உட்படுத்த முடியும்?*

- *ஒரு சாதகன் எல்லா மகான்களின் அல்லது ஞானிகளின் உபதேசங்களையும் கேட்கத் தயாராக இருக்கவேண்டும். ஒவ்வொருவரிடமும் ஒருவன் கற்றுக்கொள்ள முடியும்.*

*காந்திஜி சொன்னதை நினைத்துப் பாருங்கள்: ''எனது வீட்டின் எல்லாப் பக்கங்களிலும் சுவர் எழுப்பி, ஜன்னல்களை அடைக்க நான் விரும்பவில்லை. அனைத்து தேசகலாச்சாரங்களின் காற்றும் என் வீட்டில் சுதந்திரமாக வீச வேண்டும். ஆனாலும், நான் வகுத்துக் கொண்ட என் சொந்த ஆன்மிகப் பாதையிலிருந்து அவற்றால் என்னைத் தூக்கி எறியும்படி விடமாட்டேன்.''*

- **வானத்தில் ஏதேனும் பறவை இன்னொரு நாட்டைக் கடக்கும்போது பாஸ்போர்ட் எடுத்துச் செல்வதைக் நீங்கள் கண்டுள்ளீர்களா? மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட தடைகள், எல்லைகளைப் பற்றி அவை கவலைப்படுவதில்லை. முழு சுதந்திரத்தையும் அவை அனுபவிக்கின்றன. அது போல, பப்பா மற்றும் அனைத்து மகான்களும் இந்த உலகம் முழுவதற்கும் சொந்தமானவர்கள். அவர்கள் எந்த பிரிவிற்கோ அல்லது சமயத்திற்கோ மட்டும் உட்பட்டவர்கள் அல்ல.**

### (17) எல்லாவற்றையும் அப்படியே ஏற்றுக் கொள்ளுதல்

- **''இந்த உலகில் எந்தவிதமான ஒழுங்கற்ற நிலையும் இல்லை. எல்லாம் எப்படி இருக்க வேண்டுமோ அப்படியே இருக்கிறது.''**

- இந்த வார்த்தைகளை ஏற்றுக் கொள்வது ரொம்ப கடினமாக தென்பட்டாலும், அன்பே வடிவான அவரது சாந்நித்யத்தை உணர எவ்வளவு தீவிரமாக நாம் முயற்சி செய்ய வேண்டியுள்ளது. படிப்படியாக நமக்கு உள்ளேயும் வெளியேயும் காணும் ஒழுங்கற்றவை, மற்றும்,

அமைதியின்மையாக தென்படுபவைக்கு பின்னால் ஒரு ஒழுங்கு நிலை ஒரு நேர்த்தியுடன் இருப்பதை நாம் மெதுவாக உணர்வோம். ஏனெனில், நடப்பது எல்லாம் இறைவன் இச்சைப்படியே. அவர் அன்பு, இணக்கம், அமைதியின் வடிவம் கொண்டவர். அவரே எல்லாவற்றையும், எல்லா நிகழ்வுகளையும் அனைவரது நன்மைக்காகத் தீர்மானிக்கிறார்.

- இன்னொரு விதமாக சொன்னால், எங்கெல்லாம் அன்பு இருக்கிறதோ, அங்கெல்லாம் ஒழுங்கற்ற நிலை என்ற லேபிலை அதற்கு ஒட்டாமல் இருப்போம்.

- இது எப்போது சாத்தியம் என்றால் நம்மை தனித்துவ நிலையில் இருந்து விஸ்வ நிலைக்கு நம்மை உயர்த்திக் கொள்ளும்போதுதான் முடியும். அன்பு என்ற கண்ணாடி கொண்டு பார்க்கும்போது எல்லா இடங்களிலும் அந்த ஒழுங்கு நிலையைத்தான் காண்போம். மலை மேல் இருந்து தான் அழகான காட்சிகளை பார்க்கலாம்; நிலத்தில் இருந்து அல்ல.

- **நம்மை சுற்றி இருக்கும் ஏராளமான விஷயங்களில் ஏதேனும் ஒரு ஒழுங்கு முறையைப் பார்க்க முடியுமா? அது ஒரு குழப்பமாகவும் ஒழுங்கற்றதாகவும் இருக்காதா? ஆனால், ஒருவர் ஆகாய விமானத்தில் இருந்து கீழே பார்க்கும் போது ஒரு சரியான வரைபடம் போல தெரிகிறது அல்லவா? நாம் நம் முன் இருக்கும் விஷயங்களின் முழுமையை பார்த்தோமானால், சிதறி இருக்கும் துண்டுகள் எதுவும் பெரிதாகாது. நடக்கும் விஷயங்களை அப்படியே ஏற்போம்; நம் விருப்பம் போல் அல்ல.**

## (18) அனைத்து ஆன்மிக குருமார்களையும் சமமாக போற்றுவோம்

- **''ராம்தாஸ் சர்வ மத சமரசத்தை உணர்ந்துள்ளான். எல்லா மதங்களும் ஒன்றுதான். எல்லா ஆன்மிக ஆசான்களிடத்திலும் அவர் சம அன்பும், ஆதரவும் காட்டினார். அவர் ஒரே சமயத்தில் அந்த எல்லாம் வல்லவனின் சேவகனும், ஞானிகளின் ஒரு குழந்தையும் ஆவார். இந்த உண்மையை ஒருவர் உணர்ந்திருப்பதில்தான் எவ்வளவு ஆனந்தம்!.''**

- மனித இனத்தின் மிகத் தொன்மையான வரலாற்றை ஆராயும்போது, அது பயணிக்கும் திசையை கவனிக்காமல் இருக்க முடியாது. விண்மீன்களாக திகழும் ஒளி பொருந்திய ஆன்மாக்கள் இயற்கை, இயல்பு மற்றும் தொலைநோக்குப் பார்வை முதலியவற்றில் சாதாரண மக்களிடம் இருந்து முற்றிலும் மாறுபட்டவர்களாகத் திகழ்கிறார்கள். அவர்கள்தாம் இந்த உலகின் மகான்கள், மகரிஷிகள், அவதாரங்கள் மற்றும் இறை தூதர்கள்! இந்த உலக வாழ்க்கையை பற்றிய அவர்களது பார்வையும் கண்டு பிடிப்புகளும் அதி உன்னதமானது; முக்கியத்துவம் வாய்ந்தது. பொதுவாக மனித இனம் முழுதும் வாழ்வைக் குறித்த தனிப்பட்ட கருத்தை கொண்டிருக்கும் போது, இந்த உன்னத ஆன்மாக்கள் விஸ்வ மய உணர்வை வரமாக பெற்றிருந்ததை அவர்களது எண்ணம், சொல் மற்றும் செயல்கள் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன.

- பல்வேறு இடங்களில் இருந்த ஒவ்வொரு ஆன்மிக மகானின் நோக்கமும் செயல்பாடும் தமது தொடர்பில் இருப்போரை ஆன்மிக வாழ்வில் விரைந்து முன்னேற

வழி காட்டுவதேயாகும். அதனால் அவர்கள் எல்லோருமே வந்தனத்திற்கும் போற்றுதலுக்கும் உரியவர்கள்.

- **பூமித் தாய் பல்வேறு தானிய வகைகளை பல்வேறு இடங்களில் பல்வேறு மனிதர்களின் தேவை மற்றும் சுவைக்கு ஏற்ற வண்ணம் உற்பத்தி செய்கிறாள் - அரிசி, கோதுமை, கேழ்வரகு, ஓட்ஸ், போன்றவை.**

- **அவை ஒவ்வொன்றும் அதற்கே உரிய தனித்துவம் வாய்ந்தவை. அது போல, பல்வேறு இடங்களில் தோன்றிய மகான்கள், மற்றும் மகரிஷிகள் அவர்களுக்கே உரித்தான முறையிலும், அடியவர்கள் பக்குவத்தை யொட்டியும் அவர்களிடம் வருபவர்களை ஊக்குவிக்கிறார்கள். இதை உணர்ந்து பப்பா அவர்கள் அனைவரையும் சமமாக போற்றினார்.**

### (19) பாரம்பர்ய மற்றும் நவீன முறைகளில் சமப் பார்வை

- **''எல்லையற்ற, நித்தியமான அந்த கடவுளை மனிதனால் தம் சிந்தனையால் எட்ட முடியாது. கடவுள் நாம ரூபத்திற்கு அப்பாற்பட்டவர். அவரை புரிந்து கொள்ள முயற்சி செய்ய, நாம் உபயோகிக்கும் கருவியே மனம். அந்த மனம் நாம ரூபத்தை வைத்தே எண்ணமுடியும். அதனால், நமது மனத்தை கடவுளின் மேல் ஒருமுகப்படுத்த, அவருக்கு ஒரு நாமத்தையும், ரூபத்தையும் கொடுக்க வேண்டியுள்ளது.'' .**

- பப்பா விக்கிரக வழிபாடு, சடங்குகள், போன்ற பாரம்பரிய வழிமுறைகளை பின்பற்றாவிடினும், அவைகள் எதையும் அவர் கண்டனம் செய்ததில்லை. ஏனெனில், பலருக்கு நாம

ரூபமற்ற பரம்பொருளை நேரடியாக சிந்தனையால் எட்ட முடியாது. மேலும், பாரம்பர்ய வழிபாட்டு முறையின் மூலம் பலர் உயர்ந்த நிலைகளை அடைந்துள்ளனர் என்பதற்கு உதாரணங்கள உள்ளன.

- ஆனந்தாஸ்ரமத்தில் விக்கிரக வழிபாடோ, பாரம்பரிய வழிமுறைகளோ இல்லாவிட்டாலும், ஆஸ்ரமம் மற்ற இடங்களில் இருக்கும் அந்த வழிமுறைகளுக்கு ஆதரவு அளிக்கிறது..

- நமது தோட்டங்களில் பூச்செடிகள் நிறைய உள்ளது.

- **அவைகளுக்கு நாம் நீர் விடுகிறோம்; உரமிட்டு வளர்க் கிறோம்; சிலவற்றை கத்தரித்து எடுக்கிறோம். பார்க் மற்றும் தோட்டங்களில் மட்டுமா செடிகள் பூக்கின்றன? இல்லையே. காட்டிலும் அற்புதமாக பல்வேறு பூக்கள் பூக்கின்றனவே. அது போல, இறைவனை நிர்குணமாகவும் அல்லது நாம ரூபத்துடனோ வழிபடலாம். இங்கே, பப்பாவின் அணுகுமுறை பாரபட்சமற்றது, மற்றும் அனைத்தையும் உள்ளடக்கியது. அவர் நிர்குண வழிபாட்டை சிலாகித்தாலும் பாரம்பர்ய உருவ வழிபாட்டை கண்டனம் செய்தது கிடையாது.**

### (20) சாட்சி உணர்வு மனதை கரைக்கும்

- **''மனத்தை விட்டு தள்ளி நின்று அதனுடைய செயல்களைக் கவனிப்பது ஒரு ஆனந்த அனுபவம். சாட்சியாக உள்ள நிலை ஸ்திரமாகும்போது மனம் கரைகிறது. அந்த கணமே மன விலகல் நிறைவடைகிறது. நீங்கள் ஆழ்ந்த அமைதியும் ஆனந்தமும் நிரம்பிய சமாதி நிலையை அடைகிறீர்கள்.''**

- *மனம் நிலைத்த அமைதி அடைய மனதிற்குள் நாமத்தை உணர்வுடன் உச்சரிக்கும் போது எண்ணங்கள் தாமே விழுந்துவிடுகின்றன என்று பப்பா கூறுகிறார். சாட்சி மனோபாவம் வெளிப்பட இது உதவுகிறது.*

- *''எல்லா இயக்கத்திற்கும் சாட்சியாக இரு. அதிலிருந்து விலகி அதை கவனிப்பவராக இருங்கள். நீங்கள் உடல் அல்ல; என்றும் நிலைத்திருக்கும் சாட்சி என்பதை கவனிப்பவரே உண்மையான நீங்கள் அதாவது - அழிவற்ற ஆன்மா'' என்று பப்பா மேலும் விளக்கியுள்ளார்''.*

- *''வெள்ளைத் திரை அடித் தளம். விதவிதமான காட்சிகள் அதில் காட்டப்படுகின்றன. ஆனால் திரை எதனாலும் தொட முடியாமலும் பாதிப்பு அடையாமலும் எப்போதுமே நிலைத்து இருக்கிறது. அது போல, சாட்சி மனோபாவம் என்பது மிதக்கும் எண்ணங்களால் பாதிப்படையாமல் நிலைத்த அமைதியை அடைகிறது.''*

## மனதில் நிறுத்த வேண்டிய கருத்துக்கள்

- *ஆரம்பத்தில் இந்த முயற்சி ஒரு வெளிநோக்குப் பயணமாகத் தோன்றலாம். இதில் நாம் முன்னேறும் போது இது ஒரு அகநோக்குப் பயணம் என்பது புரியும்.*

- *இறுதி இலக்கை அடைவது எவ்வளவு முக்கியமோ அது போலவே பாதையில் பயணிப்பதும் அவ்வளவு முக்கியம்.*

- *ஒவ்வொருவரின் தனிப் பாதையை கண்டறிந்து விசாலமாவதற்கு வழி வகுத்து விஸ்வமய உணர்விற்கு அந்தப் பாதை அழைத்துச் செல்லும்.*

- *புறத்தில் செய்யும் உருவ வழிபாடு மேம்போக்காக இல்லாமல் உண்மையிலேயே போற்றுதலுக்கு உரியதாக*

இருக்கும்.

- *'காண்பான்' என்ற பதத்தின் உண்மையான அர்த்தத்தைச் சரியாக புரிந்து கொள்ள இந்த தேடுதல் உதவும்.*

- *பப்பாவின் இந்த பொன்மொழி மெய்யான அர்த்தமுள்ளதாகத் தோன்ற ஆரம்பிக்கும்: ''நாம் வாழும் இந்த உலகமே ஒரு பள்ளிக்கூடம். இதில் நிகழும் நிகழ்வுகளை கவனித்தலும், இங்கு கிடைக்கும் அனுபவங்களும் நம் சுய வளர்ச்சிக்காக ஏராளமான வாய்ப்புகளை நமக்கு அளிக்கின்றன. இந்த உலகமே நமது குரு அல்லது கடவுள்!''*

- *வெளித்தோற்றத்தைப் பார்த்துச் சாதகர்களாகிய நாம் ஒரு அபிப்பிராயத்தை ஏற்படுத்திக்கொள்ள மாட்டோம்; ஏனெனில், நாம் பார்த்திருப்பது அந்த தனித் தன்மையின், அல்லது காட்சியின் ஒரு சிறு பகுதியை மட்டுமே.*

- ***இந்தப் பயணம் பல விஷயங்களில் தெளிவை ஏற்படுத்த உதவும்.***

  ***அவையாவன:***

  1. ***குறிக்கோளும் மனிதனும்***
  2. ***ஆத்மாவும் ஜடப்பொருளும்***
  3. ***பாதையும் இலக்கும்***
  4. ***சாதகனும் சாதனையும்***
  5. ***குருவும் சீடனும்***
  6. ***நிலையற்றதும் நிலையானதும்***

## முடிவுரை

- பப்பா ஸ்வாமி ராம்தாஸ் அவர்களின் உள்ளத்தின் ஆழ் பொருளை மேன்மேலும் அறிந்துக் கொள்வதற்கான இந்தத் தேடல் ஒரு தொடர் பயணம்; இது தொடர்ச்சியே தவிர முற்றுப் புள்ளி அல்ல. இந்தத் தேடல் கொண்டு பல ரத்தினங்களை அந்தச் சுரங்கத்தில் இருந்து வெளிக்கொணர முடிந்தது; இந்த ஆராய்ச்சியைத் தொடர்ந்தால், இன்னும் அதிகமான பொக்கிஷம் கிடைக்கும்.

- ஆன்மிகப் பாதையில், ஒரு சாதகனுக்கு இந்த தேடல் கீழ்க்கண்ட சில முக்கிய வழிமுறைகளைக் காட்டிக் கொடுக்கிறது:

- மன விகாரங்களிலிருந்து விடுபட்டு, உள் நோக்கி செல்லும் பயணத்தால் மட்டுமே பரம்பொருளை அடைவதை உண்மையாக்க முடியும். பேரன்புமிக்க பப்பா சொல்கிறார்: **''சத்தியத்தை உணர்வதற்கு, எந்த வெளி உபகரணங்களும் தேவையில்லை. இவை எல்லாவற்றையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு, நாம் நம்பும் உருவங்களையும், வழக்கங்களையும், மரபுகளையும் களைந்துவிட்டு, என்றும் சாஸ்வதமான ஒன்றை உனது முழு நிர்வாணமான நிலையில் அந்த ஆத்மாவைச் சந்திக்க வேண்டிய நாள் ஒன்று வரும்.''**

- பப்பாவின் வாழ்க்கையில் அவர் கண்டறிந்த தனித்தன்மை நம்முள் உள்ள தனித்தன்மையின் பிரதிபிம்பமே. ஒரு கஸ்தூரி மான், தன்னை வசப்படுத்தும் கஸ்தூரியின்

மணத்தைத் தேடிச் சுற்றியலைகிறது. கடைசியில் நறுமணம் வருவது வெளியில் இருந்து அல்ல; அதுனுள்ளேயிருந்து வருகிறது என்பதை உணர்வதுபோலத்தான் இது. **''மற்றவர்களிடம் மேன்மையைக் காணும்போது, அந்த மேன்மை உன்னிடத்திலும் உள்ளது; மற்றவர்களிடம் சிறுமையைக் காணும்போது அந்தச் சிறுமையும் உன்னிடத்திலேயே உள்ளது''** என்று பூஜ்ய மாதாஜி கூறுகிறார்.

- தேடுபவன், அதாவது, அந்த தனிமனித உணர்வு, பப்பா/ குரு அம்சத்தை தன்னுள் உள்ள மெய்ப்பொருளாக உணரும்வரையில், தேடலுக்கு முடிவில்லை. இதனை

  பப்பாவே, பக்தர்களுடன் பேசும்போது உறுதிப்படுத்தி யுள்ளார்:

  **''பப்பா - மாதாஜி எங்கும் நிறைந்துள்ளார்கள். இறைவன் எங்கும் நிறைந்துள்ளார். நீங்களும் எங்கும் நிறைந்துள்ளீர்கள்.''**

- பப்பாவின் வாழ்க்கையையும், உபதேசங்களையும் தொடர்ந்து ஆராய்வதன் மூலம் ஒவ்வொரு சாதகரின் ஆன்மிக வளர்ச்சியை துரிதப்படுத்த இந்தத் தேடல் ஒரு கருவியாக இருப்பதாக!

ஓம் தத் ஸத்
பிரஹ்மார்ப்பணமஸ்து
சுபம்.

*ஸ்ரீ ராம் ஜெய் ராம் ஜெய் ஜெய் ராம் ஓம்*

# சுவாமி ராம்தாஸ்

*வாழ்க்கைச் சுருக்கம்*

*தனது சந்நியாசத்திற்கு முந்தைய வாழ்க்கையில் விட்டல் ராவ் என்று அழைக்கப்பட்ட ஸ்வாமி ராம்தாஸ் வடக்கு கேரளாவின் காஞ்சங்காடு என்ற கிராமத்தில் ஹோஸ்துர்க் என்னும் இடத்தில் 1884 - ம் வருடம் ஏப்ரல் மாதம் 10-ம் நாள் வியாழக்கிழமை அன்று திரு. பாலகிருஷ்ணராவுக்கும், திருமதி. லலிதாபாய்க்கும் மகனாகப் பிறந்தார். அவர் ஜனனம் பௌர்ணமி நாளாகவும் ஸ்ரீ ராமனின் மிக சிறந்த பக்தரான அனுமன் ஜயந்தி நாளாகவும் அமைந்தது. இந்த அதிசயமான ஒத்திசைவு அவர் பிற்காலத்தில் அடையப்போகும் உன்னத வாழ்க்கையினை முன்கூட்டியே அறிவிப்பது போன்று அமைந்தது. பிறந்த அந்தக் குழந்தையை பார்த்தவரெல்லாம் அக் குழந்தையின் கண்களில் ஓர் அசாதாரணமான ஒளி பிரகாசிப்பதைக் கவனித்தனர்.*

*விட்டல்ராவ் தன் பாடப் புத்தகங்களிலோ அல்லது பள்ளி செல்வதிலோ அதிக ஆர்வம் காட்டவில்லை. இதன் விளைவாக ஆசிரியர்களின் கோபத்திற்கு ஆளானார். அவர் அவ்வப்போது பள்ளிக்கு செல்லாமல் குளியல் அறையிலோ அல்லது மாட்டுத் தொழுவ பரணையின் மேலோ ஒளிந்துக் கொள்வார். அதனால் எந்த பயனும் இல்லை. இவரின் குறும்புத்தனத்தை நன்கு அறிந்த சாமர்த்திய மிக்க அவருடைய ஆசிரியரிடமிருந்து தப்புவது அவருக்கு மிகக் கடினமாகவே இருந்தது. மேல்நிலைப்பள்ளியில் பாடங்களின் மேல் ஈடுபாடின்மையால் அதில் ஆர்வமின்றி இருந்தார். பாட புத்தகங்களை ஏற்க மறுத்தாலும் பல விஷயங்களை அறிந்து கொள்ளும் ஆர்வத்தால் இடைவிடாமல்*

அனைத்து விதமான பொது நூல்களை அவர் படித்து வந்தார். இலக்கியத்தின்மேல் உள்ள ஆர்வத்தால் சிறு வயதிலேயே

ஆங்கிலத்தில் பிறர் வியக்கும் வண்ணம் புலமை பெற்றிருந்தார். மாணவனாக இருந்த போதிலும் அவர் அறிவாற்றல் மிக உயர்ந்த நிலையில் இருந்தது. எதையும் ஒரு முறை படித்தால் அதை தனக்குள் கிரகித்துக் கொள்வார். அந்த வயதிலேயே பேச்சாற்றல் மிக்கவராய் இருந்தார். மேலும், அவர் தந்தையிட மிருந்து பிறவிக் கலையாகப் பெற்ற நகைச்சுவை ததும்பப் பேசும் திறமையில் அவருக்கு நிகர் அவரே. தான் பார்த்த சம்பவங்களையோ அல்லது தன் சொந்த வாழ்க்கையில் நிகழ்ந்தவற்றையோ பிறருக்கு கூறும்போது கேட்பவரை குலுங்கக் குலுங்க சிரிக்க வைப்பார். அவர் ஒரு நிகழ்ச்சியைப் பற்றி விளக்கும் போது அச்சம்பவத்தைக் காட்டிலும் அதைக் கூறும் விதத்தில் நகைச்சுவை மிகுந்து காணப்படும்; அதை அவர் உணர்ந்தே இருந்தார். வாழ்க்கையில் எந்த சூழ்நிலையில் அவர் இருந்தபோதிலும் அதன் கடினமான இயல்பில் மனதை செலுத்தாமல், அந்த சூழ்நிலை அல்லது நிகழ்ச்சியின் மென்மையான, நகைச்சுவையான கோணத்தில் மட்டுமே ஈடுபட்டு ரசிப்பார்.

எதிர்பார்ததது போலவே கல்வியில் பின் தங்கியதின் விளைவாக அரசு மெட்ரிகுலேஷன் கல்வியில் விட்டல் ராவ் தேர்ச்சி பெறவில்லை. எனவே அவர் கலை, கைத்திறன் சார்ந்த பள்ளியில் சேர்ந்து சித்திரம் வரைதல், செதுக்குதல் முதலியவை பயின்றார். இதில் அவரின் முன்னேற்றம் குறிப்பிடும்படியாக இருந்தபோதிலும், எதிர்கால வாழ்க்கைக்கு பிராகசமாக இல்லாததால் அதைவிட்டு மும்பாயில் உள்ள விக்டோரியா

ஜூப்லி தொழிற்கல்வி நிறுவனத்தில் சேர்ந்து ஆடைகள் வடிவமைக்கும் (design) பாடக் கல்வியில் மூன்றாண்டுகள் பயின்று ஆடைகள் உற்பத்தி செய்யும் பாடத்தில் சான்றிதழ் பெற்றார்.

குல்பர்காவிலுள்ள ஒரு நூற்புத் தொழிற்சாலையில் நூல் நூற்கும் பிரிவின் அதிகாரியாக பணியாற்றிக் கொண்டிருக்கையில் 1908-ல் ருக்குமாபாய் என்பவருடன் திருமணம் நடைபெற்று 1913-ல் ரமாபாய் என்ற ஒரு பெண் குழந்தையும் பிறந்தாள்.

அவர் வேலை செய்யும் காலகட்டத்தில், வாழ்க்கையில் சிறிது காலமே பணியிலும் பெரும் பகுதி வேலையின்றி சும்மாவே இருந்தார். அவர் ஒரு வேலையில் வாய்ப்புக்கிடைத்து அந்த வேலையில் நிலைத்திருக்கும் முன்பே அவர்மீது எந்த குற்றமுமின்றியே ஏதாவது நிகழ்ந்து அந்த வேலையை அவர் இழக்க நேரிடும். கிடைத்த வேலையை இழந்து மீண்டும், மீண்டும் வருமானத்திற்காக வழி தேட வேண்டிய சூழ்நிலை உருவானது. எனவே குடும்ப வாழ்வின் இன்பங்களை அனுபவிக்க இயலாமல் மகிழ்ச்சியின்றியே பெரும் பகுதி கழிந்தது.

இப்படி பல வேலைகளில் சேர்வதும், விடுவதுமாக பல ஆண்டுகள் கழித்து முடிவில் 1917 ஆம் ஆண்டு தன் மாமனார் ஊரான மங்களூருக்குச் சென்று மாமனாருடன் வியாபாரத்தில் ஈடுபட்டார். அந்த வியாபாரத்திலும் வியாபார தந்திரங்களுக்கு வளைந்து கொடுக்க முடியாமல் போகவே மாமனாருடன் மனவருத்தம் ஏற்பட்டு வேறுவழியில்லாமல் அங்கிருந்து விடைப்பெற்றுக் கொண்டு சொந்தமாக தொழில் துவங்கினார். துணிகளுக்கு சாயம் போடுதல் மற்றும் சேலைகளுக்கு அச்சிடுதல் போன்ற தொழிலில் ஈடுபட்டார். அவர் ஒரு வியாபாரியாக இருக்க முடியாத அளவிற்கு நல்லவராக இருந்ததால், வியாபாரம்

வீழ்ச்சி அடைந்து நிதி நிலைமை மோசமாகியது, குடும்ப வாழ்க்கையிலும் மகிழ்ச்சி குன்றியது.

படிப்படியாக, வெளி சூழ்நிலைகள் விட்டல்ராவை இறைபக்தியில் ஆழ்ந்து ஈடுபடுவதற்கும், பற்றற்ற மன நிலைக்கு துரிதப்படுத்தவும் உதவி புரிந்தன. தினமும் மாலை நேரங்களில் அவருடைய சகோதரரான சீதாராம்ராவ், வீட்டில் அவர் குழந்தைகளுடன் ஸ்ரீகிருஷ்ண விக்கிரகத்தின் முன் நாம சங்கீர்த்தனத்தில் ஈடுபடுவார். விட்டல்ராவ் அவர்களுடன் பஜனையில் தானும் ஒரு மணி நேரம் ஈடுபடலானார். அது போன்ற நேரங்களில் அவர் தன்னை மறந்து பேரானந்த நிலையில் சுய உணர்வற்று அமர்ந்து விடுவார். இந்த காலகட்டத்தில்தான் அவர் ராம நாமத்தைத் திரும்ப, திரும்ப ஜபிக்கத் துவங்கி, அதன் மூலம் அவருடைய மனதில் அமைதியும் மகிழ்ச்சியும் தோன்றலாயிற்று. அவர் தொடர்ந்து அந்த புனித நாமத்தை இடைவிடாமல் சொல்லியதால் அந்த நாமத்தினால் ஈர்க்கப்பட்டு அவரையும் அறியாமல் எந்த நேரமும் எந்தப் பணியில் ஈடுபட்டிருந்தாலும், தெருவில் நடக்கும்போதும் அந்த நாமத்தை உச்சரிப்பதும் அல்லது அது மெல்லிய ஒலியாக அவரிடம் எழும்புவதும் தானாக நடந்து வந்தது. இரவு நேர உணவை தவிர்த்து, உடலுக்கான சுகங்களையும் தேவைகளையும் குறைத்துக்கொண்டார். வேகமாக மாறிக்கொண்டு வரும் அவரின் இந்தப் புதிய வாழ்க்கை அவர் மனைவியை மிகுந்த பயத்திற்கும் கவலைக்கும் உள்ளாக்கியது. எவ்வளவோ மன்றாடியும், எதிர்ப்பு தெரிவித்தும் அவர் மனைவியாலோ அல்லது மகளாலோ அவர் போக்கிலிருந்து அவரைத் திருப்ப முடியவில்லை. காரணம், எதை அவர் அறிந்து அடைய மிகவும் முயற்சி செய்தாரோ அந்த எல்லாம் வல்ல மகா சக்தியே தற்பொழுது தன்னை இந்த பாதைக்கு திருப்பியதென்று உறுதியாக நம்பினார்.

இந்த கட்டத்தில் அவரது தந்தை ஒரு நாள் அவரிடம் வந்தார். அவருக்கு புனித மந்திரமான 'ஸ்ரீ ராம் ஜெய் ராம் ஜெய் ஜெய் ராம்' உபதேசம் செய்தார். அந்த மந்திரத்தைத் தொடர்ந்து எப்போதும் ஜெபித்து வந்தால் நித்திய ஆனந்தத்தை பெற்று ஆசீர்வதிக்கப்படுவாய் என்று உறுதியளித்தார். அது விட்டல் ராவின் வாழ்க்கையில் ஒரு முக்கிய தருணம். அப்போதிலிருந்து அவரது முன்னேற்றம் விரைந்து இருந்தது, அதே போல உலக விவகாரங்களில் பற்றின்மை மிகுந்தது. அவர் அதன் இறுதி கட்டத்திற்கு தன்னை தயார் படுத்திக் கொண்டார்.

மிக விரைவில் (டிசம்பர் 1922 இல்) அவர் தனது உலக வாழ்க்கைக்கு விடையளித்துவிட்டு, மங்களூரை விட்டு வெளியேறினார். இரண்டு நாட்களுக்கு பின்னர் அவர் ஸ்ரீரங்கத்தை அடைந்தார். அங்கு காவிரி நதியில் குளித்தபின், தனது துணிகளை மாற்றி காவி துணியை அணிந்து சந்நியாச விரதம் எடுத்துக்கொண்டார். அவரது எஜமானர் ராமனின் கட்டளைப்படி 'ராம்தாஸ்' (ராமனின் அடிமை) என்ற பெயரை ஏற்றுக் கொண்டார். சிறிது நேரம் கழித்து அவர் பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷி அருள் வேண்டி அவர் முன் நின்றார். பகவானின் பார்வை அவரை சில நிமிடங்கள் ஊடுருவியது. பகவான் தனது தலையை அசைத்தார். இது ஆர்வமிக்க அச்சாதகரின்பால் தனது கிருபையை பொழிந்ததாகிவிட்டது என்று கூறுவதாக அது இருந்தது. இப்போது புதிய சுவாமி ராம்தாஸின் முழு உடலும் உணர்ச்சியில் நடுங்கியது. மஹர்ஷியை விட்டு அவர் அருணாச்சல மலையில் ஒரு குகைக்குச் சென்றார். தொடர்ந்து 20 நாட்கள் ராமநாம ஜெபத்தில் கழித்தார். அவர் சிறிது அரிசியை சமைத்து உட்கொண்டார். இந்த காலகட்டத்தின் முடிவில் அவர் ஒரு புதிய தரிசனத்தால் ஆசீர்வதிக்கப்பட்டார். அவர் எல்லா இடங்களிலும் தன் பேரன்புக்குரிய ராமனைக் கண்டார். அந்த

பரவசத்தில் அவர் காணும் எவரையும், எதையும் தழுவினார். அவர் உண்மையில் இறை பித்தரானார். அந்த நிலையில் அவர் இந்தியா முழுவதும் பயணம் மேற்கொண்டு புனித ஆலயங்களையும் மகாத்மாக்களையும் தரிசித்தார். ஒரு வருடம் கழித்து, அவருடைய மனைவி மற்றும் மகள் ஹூப்ளியில் உள்ள ஸ்ரீ சித்தாரூட ஸ்வாமி ஆசிரமத்தில் அவர் தங்கியிருப்பதை என்று தெரிந்து கொண்டனர். அங்கிருந்த ஸ்ரீ சித்தரூட ஸ்வாமியின் அனுமதியுடன் அவரை திரும்ப மங்களூருக்கு அழைத்துச் சென்றனர். ஆனால் சுவாமி ராம்தாஸ், தாயுடனும் மகளுடனும் தம் வீட்டிற்கு செல்வதற்கு பதிலாக, கத்ரியில் பஞ்ச பாண்டவ குகைக்கு நேராக சென்றார்.. அவர் அங்கு மூன்று மாதங்கள் தங்கியிருந்தார். அங்கு தங்கியிருந்த சமயத்தில் அவருக்கு தடையற்ற தியானத்திற்கான வாய்ப்பு ஏற்பட்டது. அவருக்கு உன்னத அனுபவம் ஏற்பட்டது. அவரைப் பொறுத்தவரையில், அவர் முதலில் பஞ்ச் பாண்டவ குகையில் இருந்தபோது தான் முதல் முறையாக அவருக்கு நிர்விகல்ப சமாதி அனுபவம் ஏற்பட்டது.

மறுபடியும் இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் அவரது யாத்திரை பலமுறை தொடர்ந்தது. அவருக்கு பெருமளவில் பக்தர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இருந்தனர். அவரது பயணம் பற்றிய தெளிவான விளக்கங்கள், அவரது மென்மையான பாணியில் அவரால் எழுதப்பட்டு, ''கடவுளைத் தேடி'' மற்றும் 'கடவுளின் தரிசனத்தில்' என பிரசுரிக்கப்பட்டது.

சில ஆண்டுகளுக்குப் பிறகு சுவாமி ராம்தாஸ் காசர்கோடு வந்து சிறிய ஆசிரமத்தைத் தொடங்கினார். இங்குதான் முதல் முறையாக கிருஷ்ணபாய் அவரை சந்தித்தார். சில ஆண்டுகள் கழித்து கிருஷ்ணாபாய் தனது முழு வாழ்க்கையையும் அவரது சேவை மற்றும் பணிக்கு அர்ப்பணித்தார்.

சுவாமி ராம்தாஸ் அந்த சிறிய ஆசிரமத்தில் தொடர்ந்து நீடிக்க கடவுளின் விருப்பம் இல்லை போலும். இறைவன், சில தீயவர்கள் மூலம் சுவாமி ராம்தாஸ் மற்றும் அன்னை கிருஷ்ணபாய்க்கு தொல்லைகளை உருவாக்கினர். இறைவன் திருவுள்ளத்திற்கு ஒப்படைத்து, எல்லாம் நன்மைக்கே என்று அந்த ஆசிரமத்தை விட்டு கிளம்பினர். பின்னர், காஞ்சன்காட்டில் ஆனந்தாஸ்ரமம், 1931 ம் ஆண்டு மே 15 ஆம் தேதி திறந்து வைக்கப்பட்டது. இது ஆரம்பத்தில் மிகவும் எளிமையான முறையில் துவங்கியது என்றாலும், ஆண்டுகளில் ஆஸ்ரமம் கணிசமாக விரிவடைந்தது. ஆனந்தாஸ்ரமம் மிகவும் சக்திமிக்க ஆன்மிக தீபமாக ஒளி வீசுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் இங்கு வருகை தருகிறார்கள். உயர்ந்த மகானின் பாதங்களில் ஏற்றப்பட்டிருக்கும் அன்பு சேவை தீபத்தை அவர்கள் திரும்ப வீட்டிற்கு எடுத்துச் செல்கின்றனர்.

சுவாமி ராம்தாஸ், அவரது பக்தர்களும், அன்பர்களும் அன்பாக அழைக்கும் பப்பா, அவர் தம்மைக் கடவுளின் அனைத்து அம்சங்களிலும் உணர்ந்ததால் அவருடைய இதயத்தில் ஆனந்த ஊற்று திறந்ததின் விளைவாக எப்பொழுதும் ஆனந்தம் பொங்க இருந்தார். ''ஓம் ஸ்ரீ ராம் ஜெய் ராம் ஜெய் ஜெய் ராம்'' என்னும் (மந்திர தீட்சை பெற்ற பிறகு 'ஓம்' அவரால் சேர்க்கப் பட்டது) இந்த மந்திரத்தை எபோதும் ஜெபித்ததால் இறைவனின் சாந்நித்தியத்தை அவரது உள்ளத்திலும், எல்லா இடங்களிலும் உணர்ந்தார். பிரபஞ்சம் முழுதும் கடவுளின் வடிவம் என்பதை உணர்ந்தார். இது அவரை முற்றிலும் சரணாகதி நிலைக்கு கொண்டு வந்தது, அதாவது என்ன நடந்தாலும், அது கடவுளுடைய சித்தத்தின்படிதான் நடந்தது என்று ஏற்கும் நிலை. இறுதியாக இறைவனுடன் இரண்டற இருக்கும் இருப்புணர்வை உணர்ந்தார். ஆகையால், இறைவனுடைய நாமத்தை எப்போதும்

ஜெபிக்கும்படியும், எல்லா விஷயங்களிலும் அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியும்படியும் அவரிடமிருந்து அறிவுரைகளைக் கேட்ட அனைவருக்கும் அவர் போதித்தார். இந்த நடைமுறை, நித்திய ஆனந்தத்தைக் கொண்டு வரும் என்று அவர்களுக்கு உறுதியளித்தார். அவர் இந்த மொழிகளின் நம்பகத்தன்மையை யாருமே ஐயம் கொள்ள எந்த காரணமும் இருக்கவில்லை; ஏனென்றால் ராம் நாமம் ஒரு சாதகனை ஆன்மிகத்தின் எந்த உயரத்திற்கு கொண்டு செல்லும் என்பதற்கு அவரே ஒரு உயிருள்ள உதாரணமாக திகழ்ந்தார். சுவாமி ராம்தாஸ் மற்றும் அன்னை கிருஷ்ணபாயுடன் பக்தர்களின் வேண்டுகோளை ஏற்று இந்தியாவில் பல இடங்களுக்கு ஒவ்வொரு வருடமும் 1949 -ல் இருந்து 1957 வரை விஜயம் செய்தனர். ஒவ்வொரு வருடமும் 1949 முதல் 1957 வரை பக்தர்கள் அழைக்கப்பட்டனர். அவர் எங்கு சென்றாலும், பஜனையும் இறை நாமமும் ஒலிப்பது பிரதான அம்சமாக இருந்தது. நீண்ட விரிவுரைகளை வழங்குவதில் அவர் ஆர்வம் காட்டவில்லை. இருந்தபோதிலும் அவர் சுருக்கமாகவே பேசினார்; ஆன்மிக விஷயங்களில் ஏராளமான கேள்விகளுக்கு பதிலளித்துள்ளார். 1954 இல் அவர் ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, ஜப்பான், மலாயா, சிங்கப்பூர் மற்றும் சிலோன் நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டபோது நண்பர்கள் அவரைச் சந்தித்து அவருடன் உரையாடுவதற்கான அரிய வாய்ப்பைப் பெற்றனர். அவர் ஆங்கிலத்தில் பல புத்தகங்களை எழுதினார். 1933 ஆம் ஆண்டில் 'தி விஷன்' எனும் ஒரு மாத பத்திரிகை தொடங்கினார். விஸ்வமய பார்வையை அடிப்படையாகக் கொண்டு உலகளாவிய அன்பையும் சேவையையும் அந்த இதழ் பரப்பியது.

அவரது கண்ணோட்டத்தின் உலகளாவிய தன்மையும், விரிந்த பார்வையும் அவரது அடிக்கடி கூறப்படும்

வார்த்தைகளில் ஒன்று, மேற்கோளாக காட்டடப்பட்டுள்ளது:

***''ராமதாஸ் குறிப்பிட்ட எந்த மதத்தையும் சார்ந்தவன் அல்ல. எல்லா சமயங்களும், நம்பிக்கையும், மதங்களும் இறுதியில் ஒரே இலக்கை அடையும் வெவ்வேறு பாதைகள் என்று உறுதியாக நம்புகிறான். ஒரு இஸ்லாமியரை பார்க்கும் போதே அது அவனுக்கு முகம்மதுவை நினைவுபடுத்துகிறது; அதே போல கிரிஸ்துவனை காணும்போது இயேசு கிறிஸ்து; ஒரு இந்துவை காணும்போது, ராமன், கிருஷ்ணர் அல்லது சிவன்; பௌத்தனைக் காணும்போது, புத்தர்; ஒரு பார்சியை காணும்போது, ஸோராஸ்டர்; உலகின் அனைத்து பெரிய ஆச்சார்யர்களும் ஒரே கடவுளிடமிருந்து வருகிறார்கள் - எல்லா இருப்புக்கும் முதல் நித்திய காரணம். அது கீதையில் அல்லது பைபிள் அல்லது குரானில் அல்லது ஸென்ட் அவெஸ்தாவில் இருந்தாலும் சரி, ஒரே குறிப்பை வலியுறுத்துகிறது - அது வீடுபேறு அடைய சரணாகதியே உன்னத வழியாகும்.''***

***ஸ்வாமி ராம்தாஸ் ஜூலை 25, 1963 இல் 79 வயதில் மஹாசமாதி அடைந்தார். உடலில் இல்லாதபோதும், அவர் தொடர்ந்து தனது ஆன்மிகக் குழந்தைகளுக்கு வழிகாட்டுதலையும், ஊக்கமளித்தும் வருகிறார். மற்றும் தீவிர சாதகர்கள் எங்கிருந்தாலும், அவரது தெய்வப் பணி அவர்களை ஆட்கொள்கிறது. இந்த உண்மையை உணர்ந்து அவர் அருளை நாடுபவர் பாக்கியரே!***

*ஓம் தத் ஸத்*

*பிரஹ்மார்ப்பணமஸ்து*

*சுபம்.*